விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆனி 29 ஷவ்வால் 13 இதழ் 149
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 13-7-84

## பங்காளதேஷில் ஜனதிபதி தேர்தல்

டாக்கா, ஜூலை 12
பங்காளதேஷில் பாராளு மன்ற பொதுத் தேர்தல்கள் எதிர்வரும டிசம்பர் மாதம் 8-ம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைமை தேர்தல் ஆணையாளர் வானொலியிலும், தொலைக்காட்சியிலும் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆயினும் ஜனதிபதி தேர்தல் எப்பொழுது நடைபெறுமென்பது பற்றி அவர் எதுவும் குறிப்பிடவில்லை, (சூ)

## சுகாதார பயிற்சி வகுப்பு

(வேலணை)
ஆரம்ப சுகாதார பராமரிப்புக்களை சிறந்த முறையில் செயற்படுத்தும் நோக்கமாக சுகாதார தொண்டர்களுக்கான மூன்றுநாள் பயிற்சி வகுப்புகள் இன்று வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகிறது.

இன்றய வகுப்பில் யாழ். மாவட்ட சுகாதாரசேவை பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். மாணிக்கம், வைத்திய கலாநிதி திருமதி ஜி. பொன்னம்பலம், யாழ். தொற்றுநோய் தடை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். விஜயராசா, வைத்திய கலாநிதி எஸ். கிருஷ்ணதாஸ், யாழ். மேற்பார்வை சுகாதார பரிசோதகர் திரு. எஸ். வேலாயுதம், ஆகியோர் உரையாற்றுவார்கள்.

## பாகிஸ்தான் அமைச்சர் வருகை

(கொழும்பு)
பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஜனப் யாகுப் அலிகான் நேற்று கொழும்புவந்து சேர்ந்தார்.

ஜனதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் இவர் நேற்று பேச்சுக்களை நடத்தினர். [சூ]

# இனப் பிரச்னைக்கு ஒரே தீர்வு

# பிரதேச சுயாட்சியே!

## ஜனநாயகம் குழிதோண்டப்படுகிறது; சர்வாதிகாரம் தலைதூக்கியுள்ளது!!"

### யாழ். வரவேற்பில் 'சரத்' கருத்து

(ஏ, வி. மாணிக்கம்)

"பிரதேச சுயாட்சி மூலம்தான் இந்த நாட்டின் பிரச்னைகளைத் தீர்க்கமுடியும். வடக்கிலும், தெற்கிலும் பிரதேச சுயாட்சிதான் இந்த நாட்டுக்கு உகந்தது என்று உறுதியாகப் பேசிவருகின்றோம். வட்ட மேசை மகாநாட்டிலும், பிரதேச சுயாட்சியைத்தான் நாம் முன் வைத்தோம்"

இவ்வாறு கலவானத் தொகுதி எம். பி. திரு சரத் முத்தெட்டுவேகம யாழ். நகர மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 41வது ஆண்டு நிறைவு விழாவில் பேசுகையில் வலியுறுத்திச் சொன்னர். கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்டப் பொதுச் செயலாளர் திரு பொன் குமாரசாமி தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் திரு. சரத்முத்தெட்டுவேகமவும், கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. கே. பி. சில்வாவும் மண்டபவாயிலில்வைத்து வரவேற்கப்பட்டார்கள்.

திரு. சரத் முத்தெட்டுவேகமவுக்கு ஆள்அளவு நீளமான றேஜாப்பூமாலை அணிவிக்கப்பட்டது.

மண்டபத்துக்கு உள்ளும் புறமும் அரிவாள்-சுத்தியல் பொறிக்கப்பட்ட சிவப்பு வர்ணக் கொடிகள் அலங்கரித்திருந்தன

#### மண்டபம் நிறைந்த கூட்டம்

இளைஞர்கள் உட்பட ஏராளமானோர் மண்டபம் உள்ளேயும் வெளியேயும் நிறைந்திருக்கக்காணப்பட்டனர்.

திரு. முத்தெட்டுவேகமவும், திரு. சில்வாவும் த்துவிளக்கேற்றி 41வதுஆண்டுவிழாவை ஆரம்பித்து வைத்தனர்.

#### பலத்த கரகோஷம்

தலைவர் திரு. பொன். குமாரசாமி தலைமை உரையில், கலவானத்தொகுதிக்கு மட்டுமல்ல, யாழ்ப்பாணத் தொகுதி பாராளுமன்றப் பிரதிநிதியாகவும் விளங்கி வருகிறுர். திரு. சரத்முத்தெட்டுவேகம என் சொன்னபொழுது, வான

(8ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி இளைஞர்கள் விடுதலை

[திருகோணமலை]
திருகோணமலை தாலையூற்றுப்பகுதியில் கடந்த சனிக்கிழமை பொலிசாரினல் கைது செய்யப்பட்ட 12 வடபகுதி இளைஞர்களும் நேற்று முன் தினம் திருகோணமலை நீதிபதியினல் விடுதலை செய்யப்பட்டனர்.

## 'அமிர்' 18ல் யாழ். திரும்புவார்

[யாழ்ப்பாணம்]
இந்தியாவில் தங்கியிருக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் இம்மாதம் 16ம் திகதி கொழும்பு திரும்பவுள்ளார்.

திரு. அமிர்தலிங்கம் 18ம் திகதி யாழ்ப்பாணம் வருவார். [மா]

## யாழ் நகர் சந்தியில் மற்றுமொரு சடலம்

[யாழ்ப்பாணம்]
ஆனைக்கோட்டையைச் சேர்ந்த செல்லையா சிறீதரன் என்ற இளைஞர் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் நேற்றுக்காலை இறந்துகிடக்கக் காணப்பட்டார்.

இவரது சடலம் யாழ். ஸ்ரான்லி வீதியில் வெலிங்டன் தியேட்டர் சந்தியில் கிடக்கக் காணப்பட்டது.

இச்சடலத்துக்குப் பக்கத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் [10 ஸ்ரீ 2223) சரிந்த நிலையிலிருந்தது.

யாழ். நீதிமன்ற மேலதிக நீதவான் கே. பி. எஸ். வரதராசா சடலம் கிடந்த இடத்துக்குச்சென்று பார்வையிட்டு அடையாளம் காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

"சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்ட இவரை எச்சரிக்கைசெய்தும் தொடர்ந்தும் ஈடுபட்டதால் மரணதண்டனை விதிக்கப்பட்டது" என்று 'தமிழீழவிடுதலை இராணுவம்' என்னும் இயக்கம் உரிமை கோரிய சுவரொட்டிகள் காணப்பட்டன. (மா)

## திருமதி தம்பிராசா விடுதலை

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபையின் முன்னுள் தமிழர் விடுதலை கூட்டணி உறுப்பினர் திரு, வே. தம்பிராசாவின் மனைவி திருமதி குமுதினி தம்பிராசா நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

காத்தான்குடியில் நடைபெற்ற வங்கிக் கொள்ளை, மற்றும் மட்டக்களப்பில்இடம்பெற்ற சில சம்பவங்கள் தொடர்பாக தம்பிராசா பொலிசாரினல் தேடப்பட்டு வந்தவர். இவர் தலைமறைவாகி விட்டதைத் தொடர்ந்து இவரது மனைவி குமுதினி கடந்த மார்ச் மாதம் நடுப்பகுதியளவில் தமது 9 நாள் கைக்குழந்தையுடன் பொலிசாரினல் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தாயுடன் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவரின் பெண் குழந்தை கடந்த மாதம் நோய் காரணமாக இறந்து விட்டது.

நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்ட இவர் நேற்று மட்டக்களப்பு வந்து சேர்ந்தார். (சூ)

## மல்லாகம் நீதிமன்றகொள்ளை

### சான்றுப்பொருள் பெறுமதி: ரூ 3,76,000!

(யாழ்ப்பாணம்)
மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் 3இலட்சத்து 76 ஆயிரத்து 602 ரூபா 5 சதம் பெறுமதியான வழக்குகள் சம்பந்தமான சான்றுப் பொருட்கள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க் கிழமை இரவு, இனந்தெரியாத நபர்கள் வானென்றில் வந்து துப்பாக்கி முனையில் நீதிமன்றக் காவலாளிகளை முகம் குப்புறப் படுக்கவைத்து, நீதிபதி வாசல்தல தொலைபேசியைத் துண்டித்து விட்டு, நீதிமன்றக்காரியாலய அறைகளை உடைத்து கொள்ளையடித்துச் சென்றது தெரிந்ததே.

பாதுகாப்பான அறையொன்றுக்குள் ('றெக்கோட் றூம்) இருந்து கொள்ளையடிக்கப்பட்ட இரும்புப் பெட்டிக்குள் 108 பவுண் (2இலட்சத்து 80ஆயிரத்து 800ரூபா பெறுமதியானவை) நகைகளும், மூவாயிரத்து 492ரூபா 51சதம் கொண்ட ரொக்கப் பணமும் இருந்ததாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

வேறு இரு இரும்புப் பெட்டிகள் உடைக்கப்பட்டு 62, 400 ரூபா பெறுமதியான நகைகளும் 2,910 ரூபா ரொக்கப் பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கொள்ளையடிக்கப்பட்ட இரு அவுட்போட் மோட்டார் இயந்திரம் 20 ஆயிரம் ரூபா என்றும், இரு தமிழ் தட்டச்சு இயந்திரங்களும் 7ஆயிரம்ரூபா என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது

மேற் குறிப்பிடப்பட்ட கணக்கு மதிப்பீட்டு விபரங்கள் சுன்னுகம் பொலிஸ் நிலையத்திலிருந்து பெறப்பட்டுள்ளது (மா)

## கூட்டணி பொதுச்சபை 21ல் கூடுகிறது

(யாழ்ப்பாணம்)
தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபைக் கூட்டம் இம்மாதம் 21ம் திகதி திருநெல்வேலியில் உள்ள கூட்டணியின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டணியின் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் கூட்டணி செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் கலந்து கொண்டு முக்கிய உரை நிகழ்த்துவார்.

இக் கூட்டத்தில் இன்றைய அரசியல் சூழ்நிலைபற்றியும், கூட்டணியின் அடுத்த நடவடிக்கை பற்றியும் ஆலோசிக்கப் படவுள்ளது.

கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் நேற்று யாழ்ப்பாணம் திரும்பினர். (மா)

## பெருந்திரளான பக்தர்கள் கூட்டம்

[வேலணை]
நயினதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் தேர்த்திருவிழாவின் போது பெருந்தொகையான பக்தர்கள் கலந்துகொண்டார்கள். [சூ]

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

A/30 கார் விற்பனைக்குண்டு. என்ஜின், கியர் பொக்ஸ் மிக அண்மையில் வேலைசெய்தது காலை 8 மணிமுதல் 10 மணி வரையும், பின்பு 12 மணியிலிருந்து மாலை 4½ மணிவரையும் 35 (புதிய நம்) சப்பல் வீதி, யாழ்ப்பாணத்தில் பார்வையிடலாம். 854

நல்ல நிலையிலுள்ள Honda 250 N, 5500 கி. மீற்றர் விற்பனைக்குண்டு. தொடர்பு; விளம்பர இல. 824, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 824

North town cross broilers நாள் குஞ்சு ரூபா 4-50 சேவல் குஞ்சுகள் 1-65, R I. R. Light Sussex கறுப்பு, வான்கோழி நாள் குஞ்சுகள் செவ்வாய் சனிக்கிழமைகளில் விற்பனையாகும். தொடர்பு: ராதா கிருஷ்ணுஸ், 392, நாவலர் வீதி, கயிலாசபிள்ளையார் கோவிலடி 839

மாநகர சபை எல்லைக்குள் புங்கங்குளம் ரோட்டில், புங்கங்குளம் ஸ்ரேஷனுக்கு அண்மையில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு R. S. றவிநாதன், 25, சப்பேல் வீதி, யாழ்ப்பாணம். 840

33 ஸ்ரீ கொமர் ஐஸ்கிறீம் வான் விற்பனைக்குண்டு, ஆறுகால் மடம் முன்பாக ஆனைக்கோட்டை. 844

அடைவுகடைக்குத் தேவையான பாதுகாப்பு கிறுதி (மரம்-இரும்பு) 2 விற்பனைக்குண்டு. அளவு 1-9X10' 1-10X5' தொடர்பு: சிங்கம்ஸ், கண்டி வீதி, மாங்குளம். 846

காரைநகர் கருங்காலியில் 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: எஸ். தியாகராசா, கருங்காலி, காரைநகர். 849

கச்சேரிக்கு அண்மையில் சோமசுந்தரம் அவனியூவில் 3/4 பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி பொன்னுத்துரை, 39/1, சோமசுந்தரம் அவனியூ, கச்சேரி. 837

8 ஸ்ரீ மொறிஸ் ஒக்ஸ்போட் (Morris Oxford) விற்பனைக்குண்டு தொடர்பு 147 (185) நாவலர் ரோட், யாழ்ப்பாணம். 773

நல்ல நிலையிலுள்ள ''பஜாஜ் செட்டாக்'' ஸ்கூட்டர் 83ஸ்ரீ 2324 உடன் விற்பனைக்குண்டு எந்நேரமும் பார்வையிடலாம். தொடர்பு கொள்ளவும் சி. எஸ். கே. மில்ஸ், பெரிய கடை, யாழ்ப்பாணம். 828

உடுப்பிட்டி சந்தைவீதியில் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு ஆர். ஆர். தர்மறட்ணம், சட்டத்தரணி உடுப்பிட்டி. 832

## கல்வி

M. B. B. S. (MEDICAL COLLEGE) பட்டப்படிப்புகளுக்கான முதல்வருட பயிற்சிகள் திறமையுள்ள டாக்டர்களாலும் விரிவுரையாளர்களாலும் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. விண்ணப்பதாரிகள் A/L (Bio) உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இடம்பெயர்ந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும், விபரத்துக்கு அதிபர், உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். விண்ணப்ப முடிவு திகதி: 31-8-84 (847)

## காணவில்லை

அடையாள அட்டை இல. 551520978V பேர்சுடன் காணவில்லை. முருகண்டியில் இருந்து யாழ்ப்பாணம் வரும் பஸ்ஸில் காணமல் போயிருக்கிறது. கண்டெடுந்தவர்கள் பின்வரும் முகவரிக்கு அனுப்பினல் சன்மானம் வழங்கப்படும். எம் பரமேஸ்வரம் மகேசன் வீதி, நவாலி வடக்கு மானிப்பாய். 863

வெளிநாட்டிலிருந்து வந்த ஒருவருடைய முக்கிய தஸ்தாவேஜுகள் அடங்கிய பாக் ஒன்று தவறிவிட்டது. இப்பாக்கில் அடங்கியிருக்கும் முக்கிய விடயங்கள் வெளிநாட்டில் வேலை பெற்றிருப்பதற்கான வேலைச்சான்றிதழ் தேசிய அடையாள அட்டை, பாஸ்போட் எடுத்ததற்கான சான்றிதழ் உள்ளன, கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் அல்லது தபாலில் அனுப்பினுல் தகுந்த சன்மானம் வழங்கப்படும், நா. நவஞானம் 449 இராமலிங்கம் வீதி நல்லூர் யாழ்ப்பாணம். 861

## தேவை

அலுமினிய வார்ப்புத் தொழிலில் அனுபவமுள்ளவர்கள் உடன் தேவை. அச்சுப் போடுபவர்கள் (Moulbers) மினுக்குபவர்கள் (Polishers) நேரில் விண்ணப்பிக்கவும். Joson Industries குமாரசாமிப் புலவர் வீதி, சுன்னுகம். 851

மருந்தாளர் ஒருவரும் ஆண் தாதி ஒருவரும் தேவை கல்விப் பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்திய ஆண்கள் 20-7-84ம் திகதிக்கு முன் காரியதரிசி, ஐக்கிய வைத்தியசாலைச் சங்கம், தெல்லிப்பழை என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். (841)

## WANTED

A reputed establishment in Stanley Road, Jaffna requires the service of a male and a female Stock Clerk with experience in stock maintainence and ledger work for immediate engagement. Salary negotiable. Closing date 20-7-84. Advt. No. 815, C/o Eelanadu, Jaffna 815

## சோதிடம்

நான் வெளிநாடு செல்ல இருப்பதால் என்னிடத்தில் எழுதத்தந்த சாதகங்களை வந்து பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றேன். பண்டிதர் நவரத்தினம் 211, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 802


கலர் பிலிம் இனம்!
விபரங்கள் நேரில்
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்


## வகுப்புகள்

இலண்டன் I. A. B. Part I, தேகாப்பியாசத் தகுதி சான்றிதழுக்கான பயிற்சி (Physical Education)யும் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. விண்ணப்ப முடிவுதிகதி 31-07-1984 விபரத்துக்கு: அதிபர் உயர் கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 857

## பிழை திருத்தம்

12-7-84ல் வெளியான 'ஈழநாடு' ஈட்டு விற்பனவு விளம்பரத்தில் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற ஈடு/4942 இலக்க வழக்கின் விற்பனவு 1984-ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 2-ம் திகதியெனத் திருத்தி வாசிக்கவும்.

வி. செ. குட்டிப்பிள்ளை, 818

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி 73-ம் இலக்கத்தில் வசிக்கும் பிருங்[Frank] என்பவர் எமது ஸ்தாபனத்தின் பெயரைப் பயன்படுத்தி மின்சாரவேலை செய்துதருவதாக ஏமாற்றிப்பணத்தை மக்களிடமிருந்து பெறுகிறுர். எமக்கும் அவருக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்றும் அவரால் ஏமாற்றம் அடையவேண்டாம் என்றும் கேட்டுக்கொள்கிறோம்.

முனீஸ்வர் பவர் வேக்ஸ்,
360, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (838)

மூன்ருவது
## நினைவஞ்சலி



ஸ்ரீதேவன் இரவீந்திரன்
மலர்வு: 8-9-1962
உதிர்வு: 13-7-1981

பருவ எழிலாக மலர்ந்த
நின்னை
கசக்கி மணந்த
காலனவன்
காலக் கெடுபிடியில்
மூன்ருண்டை
கடந்துவிட்டோம்,
நின்
வாழ்வின் பசுமை
நினைவுகள் — எம்
நெஞ்சை விட்டகலா
நின்மலர் பாதங்களுக்கு—
எம்
நினைவு சமர்ப்பணமா-
கிறது.

அப்பா, அம்மா, தம்பி,
நண்பர்கள்,
உறவினர்கள்.
361, செட்டித்தெரு,
நல்லூர். 797


## இன்றுமுதல் குதூகல ஆரம்பம்
## "VIDEO JEMIL"

தரமான சிறந்த வீடியோ படங்களை நல்ல பிரதியுடன் வழங்கி உங்களை மகிழ்விக்கக் காத்திருக்கிறுன். இன்றே நீங்களும் ஓர் அங்கத்தவராக சேர்ந்து சிறந்த வீடியோ படங்களை பார்த்து மகிழுங்கள்.

## VIDEO JEMIL

136, பாங்ஷால் வீதி, குருநகர், யாழ்நகர். (675)



## எங்கள் இன்றைய வெளியீடு

★ சிவாஜி, ஸ்ரீபிரியா நடித்த
"சிரஞ்சீவி" (PYRAMID ORIGINAL)
★ சிவாஜி, ஜெமினி, சாவித்திரி
நடித்த
"கப்பலோட்டிய தமிழன்"
[V. G. P. ORIGINAL]

கமேரா பிரதிகளையே பார்த்துப் பார்த்துச் சலித்த உங்கள் கண்களுக்கு அருமையான அசல் ஒறிஜினல் பிரதிகளில் விருந்தளிப்பவர்கள்

## குணம் வீடியோ சென்டர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 23665 (855)


## கேள்விப்பத்திர அறிவித்தல்

### பரந்தன் வை. எம். சீ. ஏ. விடுதி

பரந்தன் வை. எம். சீ. ஏ. விடுதியின் கீழ்மாடி வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் பதிவுசெய்த ஒப்பந்தகாரரிடமிருந்து 23-07-84 மு.ப. 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். வைப்புப்பணம் ரூபா 50/- செலுத்தி உரிய பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை வை. எம். சீ. ஏ. அலுவலகத்தில் அறியலாம்.

ஏ. கே. இராசேந்திரம்
தலைவர்
பரந்தன் வை. எம். சீ. ஏ.
(856) கண்டி வீதி, கிளிநொச்சி.

நான்காவதாண்டு
## நினைவஞ்சலி



கோயிலாக்கண்டி
செல்வன்
சிவசுப்பிரமணியம்
சாந்திநிகேதன்
(சாந்தன்)

மண்ணகம்: 03-02-1955
விண்ணகம்: 29-06-1980

ஆவியும் பிரிந்தேயின்று ஆண்டிது நாலேயாகித்
தூண்டிலிற் பட்டஜீவன் துடிப்பதே எங்கள்தோற்றம்
சாவிதே இயற்கையென்று சகலரும் தேற்றம் கூறி
வாழ்வினில் மகிழ்வையூட்ட வருகின்றுர் நித்தமையா
பாவியேம் உன்னைப்பெற்றுப் பால்பழம் பரிந்தேயூட்டிச்
சீர்பெற வளர்த்த சாந்தா சென்றனை யெம்மைவிட்டு
காவியே சுமந்து நின்னைக் காட்டிடைக் கொண்டேசென்று
தீயினில் வைத்த தோற்றம் தெரியுதே தினமும்தானே.

தந்தை, தாயார், ஆத்தை, சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனி, மருமகள், மருமகன்,
உற்றுர், உறவினர், நண்பர்கள்.
எபநேசர், நாயன்மார்கட்டு. 859

## 31-ம் நாள் நினைவஞ்சலி



சீனிவாசகம்
பூரணம்

தோற்றம்:
10-01-1910

மறைவு:
31-05-1984

எங்கள் வாழ்வில் ஒளியாக வாழ்ந்து எங்களை ஆருத் துயரில் ஆழ்த்தி மீளாத்துயில்கொண்ட அன்புத் தெய்வமே! தங்கள் ஆத்மா இறைவன் அடியில் இன்புற்றுச் சாந்தி பெறப் பிரார்த்திக்கின்ருேம்.

அன்னுரின் ஈமக்கிரியைகளில் பங்கு கொண்டு எமக்காறுதல் கூறிய அனைவர்க்கும் நன்றி நவில்கின்ருேம். அத்துடன் இன்னுளிலும் (13-7-84) பங்குபற்றுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்ருேம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழை. 848

★ பொய்த்தாடிகள், முகமூடிகள்கண்டுபிடிப்பு

# ‘சீக்கியத்தலைவர் மத்தியில் பல மோசடிக்காரர்கள்!’

## பிரதமர் இந்திரா வெளியிட்ட தகவல்

**புதுடில்லி, ஜூலை 12**

**சீக்கியத் தீவிரவாதிகள் மத்தியில் பல மோசடிக்காரர்களும் இருந் திருக்கிறார்கள் என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கூறியுள்ளார்.**

நேற்றுத் தம்மைச் சந்தித்த காங்கிரஸ் சீக்கிய ஆதரவாளர்களிடம் பஞ்சாப் பிரச்னை குறித்துப் பேசினார். அப்போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புனித ஸ்தலமான பொற்கோவிலில் இறந்து கிடந்தவர்களில் பல மோசடிக்காரர்களும் இருந்தார்கள் என்ற உண்மை அம்பலத்திற்கு வந்துள்ளதாகத் திருமதி இந்திரா அவர்களிடம் சொன்னார்.

அங்கே முகமூடிகளும், பொய்த் தாடிகளும் கண்டு பிடிக்கப்பட்டதாகவும், இவைகள் மோசடிக்காரர்களின் உடமைகள் என்றும் அவர் வர்ணித்தார்.

திருமதி இந்திரா காந்தி மேலும் கூறியதாவது:-

‘‘பஞ்சாப்பில் ஒற்றுமை, அமைதி மிகவும் அவசியமாக இப்போது தேவைப்படுகிறது. அங்கு நிலைமை சீராகவேண்டும். இதற்குப் பஞ்சாப் மக்களின் ஒத்துழைப்புத் தேவை. நிலைமையை மோசமாக விடக்கூடாது. அங்கு பீடித்துள்ள அச்ச உணர்வைப் போக்க வேண்டும். அதற்கேற்ற சூழ்நிலையை நாம்தான் உருவாக்க வேண்டும்’’.

பஞ்சாப்பிலிருந்து ராணுவம் வாபஸாக வேண்டுமென்ற கோரிக்கையைச் சீக்கியத் தலைவர்களும், எதிர்க் கட்சிகளும் விடுத்துள்ளன. ஆனாலும், இப்போதைக்கு அமிர்தசரஸ் பொற்கோயிலிலிருந்து ராணுவம் வாபஸ் பெறுவதில்லை என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

# “நட்பு நிறைந்த சூழ்நிலை உருவாகவேண்டும்”

## — ஸெயில்சிங்

புதுடில்லி, ஜூலை 12

மக்கள் சிலரின் மனதில் எழுந்த தப்பெண்ணத்தை அகற்றி நட்பு நிறைந்த சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று இந்திய ஜனாதிபதி திரு. ஜானி ஸெயில்சிங் கேட்டுக்கொண்டார்.

ராஷ்டிரபதி பவனில் சமீபத்தில்... தம்மைச் சந்தித்த சீக்கிய இளைஞர் குழுவிடமே இதனைத் தெரிவித்தார்.

‘‘வெறுப்புக்குப் பதிலாக அன்பை ஏற்படுத்தவேண்டும். குரோதத்தை மறக்கச்செய்து, ஒரே குடும்பத்தவர் என்ற உணர்வை ஏற்படுத்தவேண்டும்’’ என்று கூறிய ஜனாதிபதி, பஞ்சாப்பில் நிலைமை மோசமாவதற்குக் காரணமாக இருந்தது பொய்ப் பிரசாரம் என்றார்.

ஜனாதிபதி ஸெயில்சிங் மேலும் கூறினார்:

‘‘ஒரு சிலர் இப்பிரச்னையைத் தமக்குச் சாதகமாக்க முயன்றனர். இதன் விளைவாக நிலைமை மோசமானது. இனியும் இப்பிரச்னையை வளர விடக்கூடாது. தேச பக்தியும், தேசிய பக்தியும் ஒவ்வொருவரிடமும் ஏற்படும்போது பிரச்னைகள் ஓய்ந்து ஒழிந்து போகும்’’.

# “பாகிஸ்தான் தன்னம்பிக்கை இழந்தால் ஆப்கானிஸ்தான் கிளர்ச்சியாளர்க்கு தோல்வியே கிட்டும்”

வாஷிங்டன், ஜூலை 12

‘‘பாகிஸ்தான் தன் பலத்தில் நம்பிக்கை இழக்கும் பட்சத்தில், தற்போது ஆப்கான் ஆட்சியாளருக்கு எதிராகப் போரிடும் கிளர்ச்சியாளர்களின் முயற்சிகள் வீணாகிவிடும்.’’

அண்மையில் அமெரிக்க காங்கிரஸ் கமிட்டிக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் கஸ்பர் வெய்ன்பேகர் மேற்கண்டவாறு கூறினார்.

ஆப்கான் கிளர்ச்சியாளர்களுக்குப் பாகிஸ்தானிய பிராந்தியத்தில் பயிற்சியளிக்கும் சில முகாம்களுக்கு அண்மையில் அமெரிக்க உப ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மேற்கொண்ட விஜயமும், அத்தருணம் அவர் கூறிய கருத்துக்களும் ஆப்கான் விவகாரத்தில் பாகிஸ்தானை முழுமையாக ஈடுபடுத்த வாஷிங்டன் மேற்கொள்ளும் மூஸ்தீபுகளையே புலப்படுத்துகின்றன என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

மேற்படி விஜயத்தின்போது ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் துருப்புகள் வெளியேறும்வரை பாகிஸ்தானிய பிராந்தியத்திலுள்ள ஆப்கான் கிளர்ச்சியாளர்கள் தொடர்ந்து யுத்தம் செய்ய வேண்டுமெனவும் உப ஜனாதிபதி புஷ் கோரியிருந்தார். அது மட்டுமன்றி, பாகிஸ்தானில் ‘அகதிகள்’ என்ற பெயரில் வந்து முகாமிட்டிருக்கும் ஆப்கான் கிளர்ச்சியாளர்களினது ‘நலன்களின் பொருட்டு’ 140 லட்சம் டாலர்களையும் அவர் வழங்கியிருந்தார்.

இது தொடர்பாகசோவியத் தினசரி ‘பிராவ்தா’ எழுதுகையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

‘‘ஆப்கான் ஜனநாயகக் குடியரசுக்கு எதிராக ஆக்கிரமிப்புத் தளமாக பாகிஸ்தானைப் பயன்படுத்த றீகன் நிர்வாகம் முயலுகின்றது. ஐ.நா. பொதுச் செயலாளரினது மத்தியஸ்தத்தின் கீழ் இஸ்லாமாபாத்துக்கும் காபுலுக்குமிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் ஏதாவது முன்னேற்றம்காணப்படும் ஒவ்வவாரு தருணத்திலும் அதற்கு முட்டுக்கட்டையிட ஒரு மறைமுகமான சக்தி முயன்று வந்தள்ளது.

‘‘ஆப்கானிஸ்தானுக்கு எதிராக ஒரு தளத்தினை பாகிஸ்தானில் அமைப்பதானது இந்து சமுத்திர பிராந்தியத்தைப் பொறுத்தளவில் ஒரு பாரதூரமான விஷயமாகும். இப் பிரதேசத்துக்கான அணியில் அமெரிக்க மத்திய கடற்படைத் தலைமைப்பீடம்பாகிஸ்தானையும் இணைத்துக் கொண்டுள்ளது

‘‘ஆனால், ‘சியாட்டோ’ ‘சென்டோ’ ஆகிய இராணுவ அணிகளில் பங்கு கொண்டதன் மூலம் பாகிஸ்தானுக்கு நஷ்டமே தவிர லாபமேதும் ஏற்படவில்லை.

# தமிழக அரசவைக் கவிஞர் புலமைப்பித்தன்

சென்னை, ஜூலை 12

தமிழ் நாட்டின் அரசவைக் கவிஞராகப் புலவர் புலமைப் பித்தனை தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது.

கவியரசு கண்ணதாசன் தமிழக அரசவைக் கவிஞராக நியமிக்கப்பட்டிருந்தார். அவர் காலமான பின்னர் இப்பதவி காலியாக இருந்தது.

புலமைப் பித்தனை இப்போது மூன்றாண்டு காலத்துக்கு இப்பதவியில் அமர்த்தியுள்ளது. இவருக்கு மதிப்பு ஊதியமாக மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

மேலும் ஒன்பதுபேரை தமிழ்நாடு அரசவைக் கலைஞர்களாகவும் நியமித்துள்ளது. மகாராஷ்டிரபுரம் சந்தானம், குன்னக்குடி வைத்தியநாதன், திருமதி பத்மா சுப்பிரமணியம் ஆகியோர் இந்த ஒன்பது பேரில் அடங்குவர். ஏற்கனவே 21 பேர் அரசவைக் கலைஞர்களாக உள்ளனர்.

# ஜெயலலிதாவுக்கு பொலிஸ் பாதுகாப்பு!

சென்னை, ஜூலை 12

ஜெயலலிதா பேசும் அ.தி.மு.க. கூட்டங்களுக்கு இப்போது பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

அ.தி.மு.க. கொள்கைப் பரப்புவதற்குப் பொறுப்பாளரானஜெயலலிதாவுக்கு கொலை மிரட்டல்கள் வந்துள்ளதே இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைக்குக் காரணமாகும்.

இது பற்றி செல்வி ஜெயலலிதாவிடம் நிருபர் கேட்டபோது, ‘‘எனக்கு வந்துள்ள கொலை மிரட்டல்களைப் பற்றி மக்கள் அறிவார்கள் இந்த நிலையில்தான் எனக்குப் பொலிஸ் பாதுகாப்புத் தரப்படுகிறது. அத்தோடு என் பேச்சைக் கேட்க லட்சக்கணக்கான மக்கள் வருகிறார்கள். எனக்காக இல்லாவிட்டாலும் மக்களுக்காக பொலிஸ் பாதுகாப்பு நிச்சயம் வேண்டும்’’ என்றார்.

எம். ஜி. ஆருக்குப்பின் முதலமைச்சராவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று கேட்டதற்கு, ‘அந்த விஷயம்பொதுத் தேர்தலில் வெற்றிபெறும் எம். எல். ஏ. க்கள் எடுக்கும் முடிவல்லவா!’ என்றார்.

## அடையாள அட்டை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் க. பொ. த. சாதாரண, உயர்தர வகுப்புகளில் கற்கும் 124 மாணவிகளுக்கு தேசிய அடையாள அட்டைகளைக் கல்லூரிமூலம்பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளைக் கல்லூரி அதிபர் திருமதி க. ஆறுமுகதாசன் மேற்கொண்டு வருகின்றார்.

ஹோம் பினான்ஸ் லிமிட்.
பூகொடை ஆலைத்துணிகள்
யாழ். புடவை வியாபாரிகட்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்
எம்மிடம் பணம் நிலையாக
வைப்புச் செய்த வியாபாரிகட்கு அவர்கட்குரிய
30% வருடவட்டி வழங்குவதுடன்
புடவை வகைகளும் கடன் வசதியுடன்
வியாபாரத்திற்கு வழங்கப்படும் என்பதை
மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்
NATIONAL DELUXE
மின் விசிறிகள்
கடன் வசதியுடன் உண்டு
விபரங்கட்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
ஹோம்பினான்ஸ் லிமிட்டெட்
82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24310

யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி
நீங்கள் வெளிநாடு செல்ல வேண்டுமா?
உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்து கொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்
குரோஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க் செல்வதற்கான விசா, பயணச்சீட்டுக்கள் மற்றும் சகல ஏற்பாடுகளும் மிகக் குறைந்த கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.
குறிப்பு:
கனடா செல்வதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.
Cross Travel Services (Pte) Ltd.
STAGE II, MODEL MARKET
No, 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.
Phone No: 22040, 22065. TELEX No. 22207 (C. T. S) C E

### மணிவாக்கு

உறுதியான கற்பாறையானது காற்றினுல் அசைவதில்லை. அதேபோன்று அறிவாளிகள் புகழ் மொழிகளினுலோ அவதூறுகளினுலோ அசைந்துவிடுவதில்லை.

—தர்மபதம்.

# நமது நோக்கு

## ஊக்கம் பெருத அச்சகத் தொழில்

அச்சகத் துறையில் ஏற்பட்டுள்ள அதி நுணுக்கமானமாற்றங்களின் காரணமாக அதி புதுமையான அமைப்புகளுடன் கூடிய பிரசுரங்களை மிக விரைவாகப் பெற்றுக்கொள்ளும் வசதி இன்று வாசகர்களுக்குக் கிடைத்துள்ளது.

ஆரம்ப காலத்தில் அச்சகத் துறைக்குத் தேவையான சகல பொருட்களுமே வெளி நாட்டிலிருந்தே இறக்குமதி செய்யப்பட்டு வந்தன.

இன்றுமட்டும் நிலைமை மாறிவிட்டதா?

அச்சியந்திரங்கள், உபகரணங்கள், உதிரிப்பாகங்கள் மட்டுமல்ல; அச்சுத் தொழிலுக்குத் தேவையான கடதாசியையும்கூடப் பெருமளவில் வெளிநாட்டிலிருந்தே இறக்குமதி செய்யவேண்டிய நிலை.

வாழைச்சேனை, எம்பிலிப்பிட்டிய போன்ற காகிதத் தொழிற்சாலைகளினுல் உள்ளூர்த் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாத அளவுக்குப் பிரசுரத் தொழில் அபிவிருத்தியடைந்துள்ளது.

இருந்தும், அச்சுத் தொழில்துறையினரும், பிரசுரகர்த்தாக்களும் போதிய அளவு ஊக்கமளிக்கப்படுகிறுர்களா என்றுல் இல்லை என்றே பதில் வரும்.

''ஒரு காலத்தில் அச்சகத் துறையினர் தமதுஇயந்திரங்களுக்குத் தேவையான ஒரு திருகாணியை இறக்குமதி செய்வதானுலும் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் அனுமதியைப் பெற வேண்டியிருந்தது. இன்று எமது அச்சகத்துறையினர் உலகில் மற்றெல்லாரையும் போலவே நல்ல சிறப்புடன் விளங்குகிறுர்கள். ஆனுல், ஒரு காலத்தில் நல்ல ரகக் காகிதம், மை மற்றும் உதிரிப்பாகங்களைப் பெற்றுக் கொள்ளமுடியாது பின்தங்கிய நிலை இருந்தது. இப்பொழுதோ தாராள பொருளாதாரக் கொள்கை காரணமாக நிலைமை மாறியுள்ளது. செலாவணிக் கட்டுப்பாட்டாளரையோ அரசாங்கத்தையோ அவர்கள் குறை கூற வேண்டிய நிலைமை இல்லை.''

இவ்வாறு ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் சிலதினங்களுக்கு முன் ஹோட்டல் தப்ரபேனில் நடந்த இலங்கை அச்சக மன்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசும்போது கருத்து வெளியிட்டிருக்கிறுர்.

அச்சகத் துறையினருக்குத் தேவையான நவீன சாதனங்கள் எல்லாமே இறக்குமதி செய்யப்படுவது சரிதான்; இங்கு அத்துறை நவீனமயமாவதற்கும், அதிகரித்துவரும் மனித சக்தியின் ஒருபகுதி அத்திசையில் பிரயோகிக்கப் படுவதற்கும் அவசியம்தான். ஆனுல்—

அத்துறையின் உயிர்நாடியான பிரசுர வெளிப்பாட்டுக்கும், அவைகளுக்கான சந்தை வசதிக்கும் என்ன உத்தரவாதம் தரப்படுகிறது? எந்த வகையில் ஊக்கமளிக்கப்படுகின்றது?

அவசியமற்ற, அர்த்தமற்ற, வருங்கால சந்ததிகளின் தார்மீகத் தன்மையையே நாசமாக்கிவிடும் நச்சுப்பிரசுரங்கள் இங்கே தாராளமாகக் கொண்டுவந்து குவிக்கப்படுகின்றனவே!

இதனுல் அச்சுத்தொழிலும் வெகுவாகப்பாதிக்கப் படுகிறதே!

இங்கே அதி நவீன மாதிரிகளில் பிரசுரங்களை வெளியிட முடியும்; அந்த அளவுக்கு அச்சுத் தொழில் வளர்ந்துவிட்டது என்று அமைச்சர் அல்விஸ் அவர்கள் பெருமை பேசும் அளவுக்கு அத்தொழிலுக்கு ஊக்கம் தரப்படவில்லையென்பதே எமது கட்சி.

அண்மையில் இலங்கை தொலைபேசி விபரக்கொத்து ஒன்றினை தொலை தொடர்புத் திணைக்களம் வெளியிட்டுள்ளது. அழகான அட்டையும் 320 பக்கங்களும் கொண்ட இப்பிரசுரத்தை அச்சிடுவதற்கு இலங்கையில் அச்சகமே இல்லாமல் போய்விட்டதா என்று நாம் கேட்பதில் நியாயமுண்டு. ஆங்கிலத்தில் மாத்திரம் வெளியிடப்பட்டுள்ள இப்பிரசுரத்தை அச்சடிக்க அரசு மலேஷியாவுக்குச் செல்லுமளவுக்கு நிலைமை இங்கு மோசமாகிவிடவில்லையென்பதை அமைச்சர் ஒப்புக்கொள்வார் என்றே நம்புகின்றேம்.

இதுவும்,இதுபோன்ற நடவடிக்கைகளும் உள்ளூர்த் தொழில்களைப் பாதிக்குமேயன்றி வளர்ச்சிக்கு உதவமாட்டா. விபரக்கொத்தின் தமிழ், சிங்களப்பிரதிகளாவது இலங்கையில் அச்சிடப்படுமா என்பது தெரியவில்லை.

இன்றைய நிலையில் தாராள இறக்குமதியின் காரணமாக அச்சுத் துறையில் ஈடுபட்டுள்ள வசதிபடைத்த நிறுவனங்களால் மட்டுமே நவீன யந்திர சாதனங்களைத் தருவித்துக்கொள்ளமுடிகிறதுஎன்பதைக் கவனிக்கவேண்டும். சிறிய அச்சகங்களுக்குப் புதுரக இயந்திர சாதனங்களை வசதிக் கட்டணங்களின் அடிப்படையில் இறக்குமதி செய்து கொடுக்கவும், தொழில்நுட்பத் துறையில் வெளிநாடுகளில் பயிற்சி வசதிகளைச் செய்துகொடுக்கவும் அரசு முன்வரவேண்டும்.

இது,உள்ளூரில் இத்துறை போட்டியுடன் முன்னேறுவதற்கும் தரமான பிரசுரங்களை வெளியிடுவதற்கும் உதவமுடியும்.

## "தமிழரின் ஒப்பற்ற பேரிலக்கியம் கந்தபுராணம்"

### நூல்வெளியீட்டு விழாவில் பேராசிரியர் 'வித்தி' உரை

(யாழ்ப்பாணம்)

''தமிழர்தம் தனித்துவம் எனத்தக்க சைவசித்தாந்த சாரமாகவும் 'மனிதசமூகவரலாற்று நியதியைப் பிரதிபலிப்பதாகவும் விளங்கும் ஒப்பற்ற பேரிலக்கியமாக விளங்குவதுகந்தபுராணமாகும். கந்தபுராணம் வெறும் கதைமட்டுமல்ல; ஆழ்ந்தகுறிப்புப் பொருள் கொண்டது. எல்லாக்காலத்திலும் எல்லாச் சமுதாயத்திலும் அவ்வச்சூழ் நிலைக்குஏற்ப பொருள் கொள்ள இடமளிப்பதாகக் கந்தபுராணம் விளங்குகின்றது.

இவ்வாறு பேராசிரியர் சு. வித்தியானந்தன் வண்ணை கதிரேசன் கோவிலில் நேற்று நடைபெற்றகந்தபுராணஉரை நூல் வெளியீட்டுவிழாவிற்குத் தலைமைதாங்கி உரையாற்றுகையில் கூறினுர்.

கந்தபுராணம் உற்பத்தி காண்டம் பருத்தித்துறை பிரம்ம ஸ்ரீ சுப்பிரமணியசாஸ்திரிகளின் உரையுடன் வெளியிடப்பட்ட 3 வதுபதிப்பு வெளியீட்டுவிழாவில் பேராசிரியர் வித்தியானந்தன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது.

''திக்கற்றவர்களுக்குத் தெய்வம் துணைசெய்கிறது என்பதையும் அத்தெய்வம் எந்த உருவிலும் எங்கிருந்தும் வரும் என்பதனையும் அத்துணைவரும்வரை கொண்ட கொள்கையில் வழுவாது நிற்பவர்களே வெற்றியடைவார்கள் என்பதையும் கந்தபுராணக்கதை உணர்த்துகின்றது

''இப்புராணத்துக்கு உரை எழுதிய பருத்தித்துறை சுப்பிரமணிய சாஸ்திரிகளின் அறிவு மகாவிசாலமானது, இலக்கணம், இலக்கியம், தத்துவம், வடமொழியறிவு, தர்க்கநூலறிவு முதலியவற்றின் சிறப்பினுலே இவரது உரைமிகச் சிறப்பாக அமைந்துள்ளது. இவ்வுரையாசிரியரின் ஆசிரியரான முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் எமது பேராசான் திரு. கணபதிப்பிள்ளையின் ஆசிரியராயினமையினுல் எனதுகல்வி மரபிலும் தொடர்புடையவராக விளங்குகின்றுர்.

இந்நூலைப் புதிய பதிப்பாக வெளியிடும் சைவச்செம்மல் கணபதிப்பிள்ளை அவர்களின் முயற்சித்திறன் வியக்கத்தக்கது. பொருளாதாரத்தியாகத்தில் மட்டுமன்றி உடலுழைப்பாலும், எமது பண்பாட்டைக் காக்கவேண்டுமென்ற ஆவலாலுமே அவரால் இத்தகைய செயலைச்செய்யமுடிந்தது'' என்றுர்.

நேற்றுக்காலை முருகப்பெருமானுக்கு அபிடேக ஆராதனைகளுடனும் கந்தபுராண ஏடு வீதிவலத்துடனும் வெளியீட்டு விழா ஆரம்பமானபின் புராணபடனம் நிகழ்ந்தது. சிவஞானவாரிதி திரு. குருசாமி புராணபடனத்தின் போது பயன் சொன்னுர். சங்கீத பூஷணம் திரு. சி. விநாசித்தம்பி பாடல்களை வாசித்தார்.

நூல் வெளியீட்டுரையை நிகழ்த்திய திரு. மு, ஞானப்பிரகாசம் பேசுகையில்

''இக்காலத்தில் இப்படியான நூல்களை வாங்கிக் கண்ணுடி அலுமாரியில் வைத்துவிடுகிறுர்கள். மிகவும் அருமையும் இனிமையும் வாய்ந்த இப்பாடல்களைப் படித்துச் சிந்தித்து வழிபடுவதனுலேயே பயன்பெறமுடியும்'' என்றுர்.

பலபெரியோர்களின் அறிமுக உரைகளும் இடம்பெற்றன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல பிரமுகர்கள் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர். (ப)

## சிவானந்தரும் சிவானந்தநெறியும்

### சி. கனகரத்தினம்

தமிழ் நாட்டிலே பிறந்து கங்கைக் கரையிலிருந்து உலகமெங்கும் ஆத்ம அறிவை பரப்பியவர் சுவாமி சிவானந்த மகரிஷி அவர்கள். இவர் 1887-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8ம் திகதி தென் இந்தியாவில் அப்பயைதீக்ஷிதர் பரம்பரையில் தோன்றி மலாயாவில் வைத்திய கலாநிதியாயிருந்துசேவை செய்து, பின் துறவியாகி 1924ம் ஆண்டு ரிஷிகேசம் சென்று சுவாமி விஸ்வானந்த சரஸ்வதியிடம் தீட்சைபெற்று தவம் புரிந்து, ஜீவன் முக்தராகி, கருணை உள்ளம் படைத்த கர்மயோகியாய், உலகம் முழுவதும் வணங்கும் ஞானியாக விளங்கினுர்.

இவர் 1932ம் ஆண்டில் சிவானந்தஆச்சிரமத்தையும்,1936ல் திவ்விய ஜீவன சங்கத்தையும், 1948ல் யோகவேதாந்த ஆரண்யக் கல்லூரியையும் தோற்றுவித்தார். சுவாமி சிவானந்தர் 1950ல் இலங்கை-இந்திய யாத்திரையை மேற்கொண்டு மக்களைத் தெய்வீகவாழ்வு வாழும்படியாகக் கருணையோடு உபதேசித்து அருளி மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தார். 1953ம் ஆண்டு ஆசிய உலக சமய மகாநாட்டைக்கூட்டுவித்தார்.வேதவேதந்தக் கருத்துக்கள் அடங்கிய பல நூல்களை இக் காலநிற்கேற்றபடி எளிய இனிய நடையில் வெளியிட்டார்.

உலக மக்களின் ஆன்மீக தாகத்தையும் மனக் கலக்கத்தையும் தீர்க்கும் தூய கங்கை நதிபோன்று விளங்கினுர் சிவனந்த வள்ளல் இமய ஜாதி சிவானந்தர் 14-7-1963ல் மகா மகா சமாதி எய்தினுர்.

ஒவ்வொரு மனிதனிடத்தும் ஈஸ்வர சைதன்யம் உள்ளது. ஈஸ்வரக் கனல் இருப்பதால் தான் மனிதன் மேன்மையடைவது சாத்தியமாகின்றது. ஆனுல் தற்காலமனிதனிடத்து அக்கனல் சாம்பல் பூத்ததாக இருக்கின்றது. சாதனம் என்னும் காற்றுல் அதை ஊதித் தள்ள வேண்டும். தணல் சுவாலையாகி அசுர சக்திகள் அனைத்தனதும் நீருக்கிவிடும். தணலை சுவாலையாக்கும் சக்தியானதுபக்தியோகம், நிஷ்காமிய கர்மயோகம் கடவுளைத் தியானத்தால் கலந்து நிற்கும் ஞானயோகம், எல்லோரையும் சமமாகக் காணுதல் ஆகிய அனைத்தையும் வாழ்க்கையில் கடைப்பிடித்தலால் சாத்தியமாகும்.

சுவாமிகள் தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தின் பெயரால் உலகெல்லாம் ஒரு குடும்பம் என்பதைச் சாதனையில் கொண்டு வந்தார்கள். தெய்வீக வாழ்க்கை வாழ விரும்புகிறவர்கள் யாவரும் தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தில் அங்கத்தினராக இருக்கவும், இச்சங்கத்தில் சமய சமூக வேற்றுமையின்றி அனைவரும் அங்கம் வகிக்க வசதிசெய்திருப்பதோடு தெய்வீக வாழ்க்கைச் சங்கம் உலக சமாதானத்துக்கும், ஒற்றுமைக்கும், சகோதரத்துவத்துக்கும் பாடுபட்டு வர வழி செய்திருக்கிறுர்.

## தொழுது அழு பொழுது

நயம்பல நயக்கும் நயினையின் நாயகியைப்
பயம்தனைப் போக்கும் பக்தரின் பெருநிதியை
மயம் அவளாகத் தொழுதழப் பொழுதும்
ஐயம் உனதாகும் ஐயமேன் மனமே!

—சங்குவேலி ப. மகேந்திரதாசன்

## தாயே வரம்தருவாய்

நானிலத்தில் நலன்விளங்க
நல்வரங்கள் அருள்வாய்
தேனனைய நினைவுகளே
சிந்தைதனில் வைப்பாய்
வானுலகும் தொழும்நயினைப்
பதிவிளங்கும் தாயே
நானுனது பதம்பணிந்தேன்
காத்தருள்தல் கேட்டேன்.

—காரை. ப. அருளானந்தம்

## மாவைக் கிருபை வெள்ளம்

பல்லவி

மாவைக் கந்தன்கொடி பறப்பது பார்
மாருதப் புரவீக வல்லிக்கருள் சுரந்த (மா)

அனுபல்லவி

நெய்தலம் கானலிலே நீண்முடிக் கோபுரம்பார்
உய்யவழி காட்டும் எழில்முருகன் தாளினைச்சேர் (மா)

சரணம்

வள்ளிமாமணவாளன் வள்ளலைத்தினம் தேடு
புள்ளி மயிலூர்ந்துவரும் புனிதனின் லம்கூடு
தெள்ளுதமிழ்த் திருப்புகழை தினமுமுருகிப் பாடு
அள்ளும் கிருபைவெள்ள ஆனந்த வாருதியாம் (மா)

—மட்டுவில் சி. சின்னத்தம்பி

## ஆங்கில தினவிழா

[யாழ்ப்பாணம்]

ஆங்கில தினவிழா வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திரு. எஸ். முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் கல்வி அதிகாரி ஆங்கிலக்கல்வி அதிகாரி வட்டாரக் கல்வி அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# சவூதி சென்றவர்கள் ஊர்திரும்ப விரும்புகின்றனர்

[சவூதியிலிருந்து எம். சுபேந்திரன்]

சவூதி அரேபியாவில் உள்ள டமாம் நகர சுத்திகரிப்பு வேலைக்கென இலங்கையின் வடபகுதியில் இருந்து 53பேர் டமாம் நகரை வந்தடைந்தனர்.

கடந்த 30ம் திகதி வந்து சேர்ந்த இவர்கள் வவனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகியமாவட்டங்களைச்சேர்ந்தவர்களாவர்.

இவர்களில் கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் 1: பேர் என்பதும், தபால் அதிபர், ஆசிரியர் கிராம சேவையாளர் ஆகியோரும் உள்ளனர் என்பதும் இவர்களுக்குத் தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரஸ்தாப 53 பேரையும் வவனியா, கரவெட்டி, நெல்லியடியிலுள்ள உப ஏஜென்சிகள் கொழும்பு-கொள்ளுப்பிட்டியிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜென்சி ஒன்றிற்குச் சிபார்சு செய்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்ட வேலை தரப்படாமல் இங்கே தாம் ஏமாற்றத்திற்கு உள்ளாகி இருப்பதாகவும், இலங்கை திரும்புவதையே தாம் விரும்புவதாகவும் கவலை தெரிவிக்கப்பட்டது.

## மகாசமாதி வாரமும் குரு பூர்ணிமாவும்

(யாழ்ப்பாணம்)

குரு பூர்ணிமா விழாவும், சுவாமி சிவானந்த மகரிஷியின் மகா சமாதி வாரமும் யாழ் நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் கொண்டாடப்படுகிறது.

இம்மாதம் 13ம் திகதி வெள்ளிக்கிழமை மாலைபூசை, பஜனை என்பனவும் சர்வ மதத்தலைவர்களின் சொற்பொழிவும் நிகழும்.

15ம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை குத்துவிளக்கு பூஜையும், பஜனையும் நிகழும். 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிவானந்தரின் 21ம் ஆண்டு புண்ணியதிதியையொட்டி விசேட பூஜை அகண்ட நாம பஜனை என்பனவும் நிகழும். 16ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 21ம் திகதி சனிக்கிழமை வரைதினமும் காலையும், மாலையும் பூஜை பஜனை நடைபெறவுள்ளது. (ப)

## 'வாசு' விடுதலை

(கொழும்பு)

நவசமசமாஜக் கட்சித் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார நேற்று நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த ஜூலை கலவரத்தை தொடர்ந்து தலைமறைவாகியிருந்த திரு. வாசுதேவநாணயக்கார அண்மையில் பொலிஸ்மா அதிபரிடம் சரணடைந்ததும் நான்காம் மாடியில் விசாரணை செயப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். பின்னர் அண்மையில் நடைபெற்ற பல்கலைகழக சம்பவங்களைத் தொடர்ந்து மீண்டும் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (சூ)

## பொலிஸார் கைப்பற்றினர்

(சுண்டிக்குளி)

யாழ். நகரில் இருந்து தனியார் வான் மூலம் கடத்தப் படவிருந்த மூன்று வீடியோ டெக்குகளை யாழ். பொலிசார் கண்டுபிடித்து சுங்க திணைக்களத்தில் ஒப்படைத்தனர்.


## வருடாந்த இல்லப்போட்டி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் கல்லூரி பிக்னல் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பிரதம விருந்தினராக வைத்திய நிபுணர் டாக்டர் சி ஞானனந்தா கலந்துகொள்வார் திருமதி எஸ். ஞானனந்தா பரிசில்களை வழங்குவார் (வெ)

## அமெரிக்க பல்கலைக்கழக விருது



(யாழ்ப்பாணம்)

அமெரிக்காவின் ஒஹியோ மாநிலத்தைச் சேர்ந்த பௌலிங்கிறீன் ஸ்டேட் பல்கலைக்கழகம், அம்பலாணர் தவேந்திரராஜ என்ற அதன் பௌதீக முதுமாணித்துறை மாணவருக்கு புலமைப் பரிசில் விருது ஒன்றை வழங்கியுள்ளது.

திரு. அம்பலவாணர் தவேந்திரராஜா இப்பல்கலைக்கழகத்தின் ஓவர்மன் என்ற அப் புலமைப் பரிசைப் பெறும் எட்டு மாணவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பௌதீகவியலில் மேற்கொண்ட இப் பல்கலைகழகத்தின் கோடைக்கால ஆராய்ச்சியொன்றுக்கே ஆயிரம் அமெரிக்க டாலர்கள் பெறுமதியான இப் புலமைப்பரிசில் விருது வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டார்.

பௌதீகவியலில் இப் பல்கலைக்கழக முதுமாணித்துறை மாணவராக இருக்கும் தவேந்திரராஜ, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும் யாழ் பல்கலைக் கழக விஞ்ஞானப் பட்டதாரியுமாவார். (கி)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பிரதம விருந்தினராக வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை கலந்துகொள்கிறார். திருமதி சிமியாம்பிள்ளை பரிசில்கள் வழங்குவார்.

# கரவெட்டியில் இன்றும் நாளையும் கத்தோலிக்க ஆசிரியர்சங்கம் நடத்தும்வேதாகம கண்காட்சி

மன்னிக்கும் மனப்பான்மையும் கட்டுப்பாடுள்ள ஒழுங்கான வாழ்வும் கடவுள் பயமும் இன்றைய நவீன சமுதாயத்திலிருந்து 'விண்வெளி'க்கு அப்பால் சென்றுவிட்டன.

சமயநூல்களைதக்கமுறையில் பயன்படுத்தாமை இதற்கு ஒரு காரணமாக அமையலாம். அவை வெறும் நூலாக அலுமாரிகளில் வைக்கப்படும் நிலையில் மட்டுமன்றி நூதன சாலைகளுக்கு உரியவையாக ஆகிவிட்டன.

ஆராய்ச்சியாளர்களும் மத அறிஞர்களுமே அவற்றைப் பயன்படுத்துகிறார்கள்.

எனவே இன்றைய இருளில் வாழும் ஈன நெஞ்சங்களுக்கு ஒளியூட்ட மதநூல்களின் கருத்துக்களைத் தக்கவகையில் புகுத்தவேண்டிய நடைமுறைகள் அவசியமாகின்றது.

இத்தகைய நடவடிக்கையில் சமயப்பணிபுரிந்துவரும் யாழ் மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் வேதாகம கருத்துக்களைக் கண்காட்சி வடிவில் மக்கள் மனதில் ஊன்றச்செய்யமுயல்வது பாராட்டத்தக்க ஓர் அம்சமாகும்.

இதுவரையில் யாழ். நகரில் மட்டும் நடைபெற்ற இக் கண்காட்சியை ஏனைய பகுதிகளிலும் நடமாடவிட்டிருப்பது இந்த ஆக்கநடவடிக்கைக்குப் பொட்டிட்டதுபோல் அமைகிறது.

இதன் முதல் அம்சமாக இன்றும் நாளையும் கரவெட்டி திரு. இருதயக் கல்லூரியில் இது நடைபெறவுள்ளது. வடமராட்சி மக்களுக்கு இது ஒரு நல்வாய்ப்பாகும்.

கத்தோலிக்க மாணவர்களின் சமய பாடத்திட்டத்தில் அமைந்த அம்சங்கள் படங்களாக, பொம்மைகளாக, மாதிரி உருவங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

வேதாகமம் பற்றிய விரிவான விளக்கங்கள் கத்தோலிக்கத் திருச்சபையின் வரலாறுகள், முதலானவற்றை வீடியோ திரைப்படங்கள், விஞ்ஞான வித்தைகள் மூலம் விளக்கும் அம்சங்கள் கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமன்றி அனைவருக்கும் விளங்கக்கூடிய முறையில் அமைக்கப்பட்டுள்ளன. புத்தகக் கண்காட்சியும் அறிவுப் போட்டியும் நடைபெறுகின்றன.

இன்றைய சூழ்நிலை, நிதி நிலைமைகளிலும் இலவசமாக நடத்தப்படும் இக்கண்காட்சியை யாழ். மறை மாவட்டத்தின் ஒவ்வொரு பங்கு ரீதியாகவும்நடத்த இச்சங்கத்தினருக்கு பொதுமக்களின் ஆதரவும் இறைவனின் அருளும்கிடைக்க இறைஞ்சுவோம்.

— ம. வரதராஜன்

## "ஆலயத்தின் தூய்மையில் கவனம் செலுத்தவேண்டும்"

### பொன்னாலையில் சிவத்தமிழ்ச்செல்வி

[சுழிபுரம்]

"ஆலயத்தை ஒட்டி வழிபடுவோர்சபை அமைக்கப்படுவதும் அடியார்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதும் மிக வரவேற்கத்தக்க செயலாகும். ஆலய பூசகர்கள் கோவில் கிரியைகளில் கவனம்செலுத்த வேண்டும். வழிபடுவோர் கோவிலின் தூய்மை, திருப்பணி போன்றவற்றில் கவனம் செலுத்தித் தொண்டுகள்செய்யவேண்டும்."

இவ்வாறு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயவழிபடுவோர் சபைக் காரியாலயத்தைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

வழிபடுவோர்சபைத் தலைவர் திரு. சுப்பிரமணியம் தலைமையில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் முன் அமைக்கப்பட்ட காரியாலயத் திறப்பு விழா நடைபெற்றது.

சபைக் காரியாலயத்தைச் சம்பிரதாய முறைப்படி திறந்துவைத்து உரையாற்றிய தங்கம்மா அப்பாக்குட்டி தொடர்ந்து பேசுகையில்; யாழ்ப்பாணத்தில் உள்ள சரித்திர பிரசித்திபெற்ற ஆலயங்களுள் ஒன்றாகவும் அருட்சிறப்பும் க்ஷேத்திரமகிமையும் உடையதாயுள்ள பொன்னாலை வரதராஜப் பெருமான் ஆலயத்தில் வழிபடுவோர் செய்யத்தக்கபணிகளுக்கு நல்ல வாய்ப்பு உள்ளது என்றும் கூறினார்.

பிரம்மஸ்ரீ கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் உரையாற்றுகையில் வழிபடுவோர்சபையில் உள்ளவர்களின் நல்லார்வம் பாராட்டத்தக்கது என்றும் அனைவரும் வழிபடுவோர் சபையில் அங்கத்துவராகியும் ஒற்றுமையுடனும் ஆலய பூசகர்களுடன் ஒத்துழைத்தும் திருப்பணிகள் பலசெய்தும் நாராயணன் அருளுக்குப்பாத்திரமாகவேண்டும் என்றும் கூறினார்.

இவ்விழாவில் முன்னாள் சங்கானை உதவி அரசாங்க அதிபர் சோ. அருணசலம், திரு. வே. த. மயில்வாகனம் ஆசிரியர் ந. சிவசண்முகமூர்த்திமுதலியோரும் உரையாற்றினார்கள் வழியடுவோர் சபைக் காரியதரிசு திரு. கா. சந்திரராசா நன்றியுரை கூறினார். [ப]

## இளையதம்பி வித்தியாலயம் சாதனை

[யாழ்ப்பாணம்]

நல்லூர் வட்டாரப் பாடசாலைகளின் பண் இசைப் பாட்டிகளும் சங்கீத நடன நாடகப் போட்டிகளும் நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி சு. சிவநாயகமூர்த்தி தலைமையில் யாழ் இந்துமகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றன.

யாழ் வண்ணார் பண்ணை இளையதம்பி வித்தியாலய மாணவர்கள் இரு போட்டிகளிலும் முப்பிரிவுகளிலும் வெற்றியீட்டியுள்ளனர் பண் இசைப் போட்டி ஆரம்பபிரிவு தனிப் பாடலில் முதலிடத்தையும், பாலர் பிரிவு இரண்டாவது இடத்தையும் ஆரம்பப்பிரிவு பெண் தனிப்பாடலில் இரண்டாம் இடத்தையும் பெற்றனர்.

சங்கீத நடன நாடகப் போட்டி ளில் ஆரம்பபிரிவு தனி கிராமிய இசைப் போட்டியில் முதலாம் இடத்தையும் தனி கர்நாடக சங்கீதப்போட்டியில் இரண்டாவது இடத்தையும் பரத நாட்டியம் ஆரம்பபிரிவில் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளனர்.

## நியமனம்

(கல்வியங்காடு)

மன்னார் புனித சவேரியர் ஆண்கள் கல்லூரியில் உதவி ஆசிரியராக கடமையாற்றி வந்த திரு சி. கணபதிப்பிள்ளை மன்னார் கோவிற்குளம் அரசினர் தமிழ் வித்தியாலயத்தின் அதிபராக இம் மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

# "பயன்தரும் காய்கறிகளை வீடுகளில்வளர்க்க வேண்டும்!"

### உதவி அரசாங்க அதிபர் உரை

[கோண்டாவில்]

"மரக்கறி விலை நாளாந்தம் உயர்ந்து கொண்டே செல்கின்றது இந்நிலைக்குக் காரணம் மரக்கறிச் செய்கையில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றமையும், பயிர் செய்கை நிலங்கள் யாவும் வீடுகளாக மாற்றப் படுகின்றமையுமாகும் இந்நிலையில் வீடுகள்தோறும் பயனற்ற பூந்தடிகளை வளர்ப்பதிலும் பார்க்க பயனுள்ளதும், வருவாயைத் தரக்கூடியதுமான காய்கறி வகைகளைச் செய்கை பண்ண வேண்டும்" என்று நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. க. சிவகுருநாதன் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் அமைந்திருக்கும் உதவி விவசாயப் பணிமனையில் விதை நடுகைப் பொருள் விற்பனை நிலையத் திறப்புவிழாவின்போது அவர் மேற்கண்டவாறு உரையாற்றினார்.

உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. எஸ். கிருஷ்ண பிள்ளை தலைமையில் இவ்விழா நடைபெற்றது. (கி)


## முடிவு திகதி பின்போடப்பட்டது

## இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டி

★ 1-ம் பரிசு ரூபா 500-00

★ 2-ம் பரிசு ரூபா 300-00

★ அமரர் இரசிகமணி கனக செந்திநாதன் அவர்களின் நினைவாக யாழ். இலக்கிய வட்டமும் 'ஈழநாடு'ம் இணைந்து நடத்தும் இக் குறுநாவல் போட்டியில் எழுத்தாளர்கள் எவரும் கலந்து கொள்ளலாம்.

★ ஆக்கங்கள் தமது சொந்தப் படைப்புக்கள் என உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

★ தாளின் ஒருபக்கத்தில் மட்டும் (புல்ஸ்காப்) 30 முதல் 80 பக்கங்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.

★ உறையின் இடது மேல் மூலையில் 'இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டி' எனக் குறிப்பிடவும்.

எழுத்தாளர்கள் தங்கள் குறுநாவலை 15-8-84 திகதிவரை அனுப்பலாம்.

★ அனுப்பவேண்டிய முகவரி :

இரசிகமணி குறுநாவல் போட்டி
ஈழநாடு வாரமலர்,
த. பெ. எண்: 49,
யாழ்ப்பாணம்.

# இன்றைய பலன்

மாதம்: ஆனி:
திகதி 29 (13 07-84)
வாரம்: வெள்ளி
திதி பூரணை மு. ப.
8-03வரைபின்பிரதமை
நட்சத்திரம்: பூரம் காலை
7-20ன் மேல் பின் உத்தராடம்

மேடம்; ஆசைவார்த்தை மூலம் உங்களிடமிருந்து அகப்பட்டதைச் சுருட்டுவதற்குச் சிலர் முனைவார்கள் இனந்தெரியாத வேதனையால் த்தாக்கப்படுவீர்கள் நிதானம் விரும்பத்தக்கது.

இடபம்; இன்று பிறருடைய மதிப்புக்கு இலக்காகுவீர்கள் சொகுசானவாழ்வும் கிடைக்கும். இன்று முன்னணியில் நிற்பீர்கள் வரவேற்க வேண்டியதினம்.

மிதுனம்; எதிலும் அவசரப்போக்கை கடைப்பிடிப்பீர்கள் தரக்குறைவான தகவல்கள் கிடைக்கக்கூடும் பெரியவர் ஒருவருடன் கருத்துவேற்றுமை தோன்றலாம்.

கடகம்; கனிவான நினைவலைகளில் இன்று ஆனந்தமாக மிதந்து செல்வீர்கள் கல்வித்துறையில் வித்துவத் தன்மை தென்படும் வாகனம் செலுத்துபவர்கள் மக்களின் ஆதரவைபெறுவர்.

சிங்கம்; அறிவுப்பசிக்கு இன்று தாராளமாக விருத்தி கிடைக்கும் ஆராய்ச்சியில் ஆர்மம் பிறக்கும் படித்தவர் ஆதரவும் உண்டு.

கன்னி; இடர்கள்பலதாக்கும் இதயத்தில் எரிமலைகுமுறும் உதவி செய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ளநேரிடும்.

துலாம்; இன்பத்தின் அணைப்பு இன்றுதாராளமாக கிடைக்கும் காதலர்கள் வாழ்க்கையில் தடைகள்விலகும் பெற்றோர் ஆதரவுமுண்டு குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

விருச்சிகம்; அடுத்தவனை நம்புவதால் ஆபத்து மிகவும் உண்டு வீண்செலவு வேண்டாம் விபரீதம் விளைந்திடுமே.

தனுசு; கைகொடுத்துதவுவதற்கு நண்பர் முன்வருவார் காரியசித்தியும்கிட்டும் நீண்டநாள் எதிரிகள் இன்று மீண்டும் நண்பர்களாவார்கள்திருப்தியானதினம்.

மகரம்; தொழில்துறையில் நல்மாற்றங்கள் ஏற்படும் மேலதிகாரிகளின் ஆதரவுதாராளமாகக்கிடைக்கும் நண்பர்கள் மூலம் புதிய தொடர்புகள் ஏற்படும் இன்றுசுபதினம்.

கும்பம்; பொருள் வரவு உபசாரம் பொழுது போக்கு இவற்றுடன் உற்சாகமூட்டும் செய்தியும் கிடைக்கும்.

மீனம்; வணிகர்கள் இன்று அதிகமுதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும் வீணை சிந்தனையால் வேதனைப்படுவீர்கள் சிலருக்கு உடல்நலடும் பாதிக்கப்படலாம்.

திருமலை
வே. ரவீந்திரன்

# பத்திரிகையாளர் சுப்பிரமணியம்



திருநெல்வேலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் அளவையம்பதியை உறைவிடமாகக் கொண்டவரும், தினகரன் பத்திரிகையின் முன்னைநாள் உதவிஆசிரியராய் லவருடங்கள் கடமையாற்றிய வருமான திரு, வல்லிபுரம் சுப்பிரமணியம் அவர்கள் இறைவனடி எய்தி ஒரு மாதமாகின்றது. இன்று அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகள் அளவெட்டியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறுகின்றது.

அமரர் சுப்பிரமணயம் திருநெல்வேலி சைவ வித்தியாலயத்திலும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியிலும் ஆரம்பக் கல்வியையும், யாழ். இந்துக் கல்லூரியில் உயர்தரக் கல்வியையும் பெற்றவர். யாழ். இந்துக் கல்லூரியில் லண்டன் மெற்றிக்குலேசன் பரீட்சையில் சித்தியடைந்த அமரர் சுப்பிரமணியம் ஆரம்பத்தில் நல்லூர், திருநெல்வேலி கிராம சபையில் பிரதம லிகிதராக கடமையாற்றிய பின் தினகரன் பத்திரிகையில் உதவி ஆசிரியராகச் சேர்ந்து நீண்டகாலமாக திறமையான முறையில் கடமையாற்றினர்.

இளமைக் காலத்தில் சங்கீதம் பயின்று நாடகங்கள் பலவற்றை நடித்தவர். சமூக சேவைகள் செய்வதில் அதிக நாட்டமுள்ள இவர் பொது ஸ்தாபனங்கள் பலவற்றில் பதவிகள் வகித்து சமூகத் தொண்டு செய்திருக்கிறார். தமிழ்ப் பற்றும் சமயப் பற்றும் நிறைந்த இவர் ஒரு சிறந்த கலைஞருமாவார். பத்திரிகைத் துறையில் அதிக அனுபவம் வாய்ந்த அமரர் வல்லிபுரம் சுப்பிரமணியம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

'நகுலன்'


# இன்றைய வானொலியில்

காலை
5-30 நாதாஞ்சலி
5-35 திருமுறைப்பாடல்கள் தனலட்சுமி இராமச்சந்திரா
6-00 சைவநற்சிந்தனை
6-05 இஸ்லாமியநற்சிந்தனை
6-10 அறநெறி ஆரம்
6-25 நிகழ்ச்சிமுன்னோட்டம்
6-30 செய்திகள்
6-40 அறிவிப்புகள்
6-50 மெல்லிசைப்பாடல்
7-00 தலையே நீவணங்காய் "பருளை விநாயகர் ஆலயம்
7-30 மாகாணச் செய்திகள்
7-35 நாதஸ்வரம் ஷேக் சின்னமௌலானா
8-15 முஸ்லிம் நிகழ்ச்சி
8-45 காலை ஒலிபரப்பு முடிவு.

மாலை
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 கோபுரதரிசனம் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
6-45 உடல்நலம்

இரவு
7-00 களத்துமேடு
7-15 இல்லறஜோதி
7-30 உலகச்செய்திகள்
7-40 நாட்டுப்பாடல்
7-45 மெல்லிசைப்பாடல்
8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
9-00 செய்திகள்
9-10 செய்தியின் பின்னணியில்
9-15 அறிவிப்புகள் -வாத்தியஇசை
9-30 பேச்சு "கண்களும் கவிபாடுமே" கமலினி செல்வராஜன்
9-45 இசைச்சித்திரம் திருமுறையுல் ஒருமுறை திருவாசகா நா. நவரட்னம்
10-15 பஜனைப்பாடல்கள்
10-30 ஒலிபரப்பு முடிவு

# யாழ்ப்பாணத்தில் நடந்த காப்புறுதிப் பரிசளிப்பு



(யாழ்ப்பாணம்)

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன அமைப்பாளர் க. வேலும் மயிலுவினல் ஒழுங்கு செய்யப்பட்ட 1983-ம் ஆண்டுக்கான காப்புறுதிப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்ற திரு ரி. ஞானலிங்கத்துக்கு அதற்குரிய தங்கப்பதக்கத்தை யாழ்ப்பாண பிராந்திய முகாமையாளர் திரு. ரி. நவரத்தினம் சூட்டினர். இப்பரிசளிப்பு விழாவுக்குத் தலைவராகவும் பிரதம அதிதியாகவும் திரு. ரி. நவரத்தினம் கலந்துகொண்டார். பரிசளிப்பு விழாவில் ஏனைய 9 பிரதிநிதிகளுக்குத் திருமதி ரி. நவரத்தினம் பரிசுகள் வழங்கினர். இக்கூட்டுத்தாபன முன்னாள் முகாமையாளர் ரி. பி. ஜே. துரைசிங்கம், கணக்காளர் திரு. எம். சிவானந்தன் பரிசளிப்பு விழாவின் நோக்கம் பற்றியும் அதன் நன்மை பற்றியும் சொற்பொழிவாற்றினர்கள்.

திரு. க. வேலும் மயிலும் 20 வருட சிறந்த சேவைக்காகத் தங்கப்பதக்கமும் முதலிடம் பெற்றமைக்காக பல விசேட பரிசுகளும் கடந்த மாதம் வர்த்தக மந்திரியிடமிருந்து பெற்றார்.

# ரூபவாஹினியில் இன்று

மாலை
5-30 நாட்டுவளம் (ஆங்கிலம்)
5-35 இசை நிகழ்ச்சி (சிங்களம்)
6-00 விளையாட்டுப் பயிற்சி (தமிழ்)
6-15 சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 இசை நிகழ்ச்சி (ஆங்கிலம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 பேட்டி நிகழ்ச்சி (ஆங்கிலம்)
9-00 'மிலேன் மொன்டே காலோ' திரைப்படம் (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம)
9-50 திரைப்படத் தொடர்ச்சி
10-30 உலகச் செய்திகள்
10-35 திரைப்படத் தொடர்ச்சி
11-30 நிகழ்ச்சிகள் முடிவு

# இவர்களுக்கு மேலும் உதவிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கிழக்கு பகுதியில், இவ் வருடம் முற்பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக வீடுகள் இழந்து, சமூக சேவைப் பகுதியினரால் வழங்கப்பட்ட, உணவுப் பொருட்களைப் பெற்ற சுமார் 1700 குடும்பங்களுக்கு. வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட கோதுமைமா, ரின்மீன், போன்றவை மிக விரைவில் வழங்கப்படவுள்ளன.

இப் பொருட்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை சாவச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு.க. துரைராஜா, தென்மராட்சி கிழக்கு பகுதி கிராம சேவையாளர்கள், விசேட சேவை அலுவலர்கள், மூலம் மேற் கொண்டுவருகின்றார்.

குறேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை
(Cross International Telecommunication Services)

FOR ALL INTERNATIONAL AND LOCAL DIRECT DIALLING TELEPHONE CALLS.

INTERNATIONAL TELEX SERVICES :- NO DELAY AT ALL, CHEAP RATES, CONTACT US RIGHT NOW.

குறேஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை.
(i) சர்வதேச, உள்ளூர் நேரடி தொலைத்தொடர்பு சேவை.
(ii) சர்வதேச ரெலெக்ஸ் சேவை.

உலகின் எப்பாகத்திற்கும் குறைந்த கட்டணத்தில் நேரடிச் சர்வதேச தொலைத்தொடர்பு சேவையும், ஒரு நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

CTS

Cross International Telecommunication Services
STAGE II, FIRST FLOOR, BUS STAND CENTRE ROAD,
MODEL MARKET, JAFFNA.
Phone No: 22040, 22065. Telex No: 22207 (C, T, S,)

மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து
அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF
குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது




இது ஒரு
"மேற்கு ஜெர்மனி 'BASF'"
தயாரிப்பாகும்.

குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 16/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

மக்வுட்ஸ் ஸ்தாபனம்
2, ஞானார்த்தபிரதீப மாவத்தை, த.பெ.இல.9
(முன்னாள் மருதானை ரோட்) கொழும்பு - 8

Metropolitan

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி -சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
முத்துராமன்-ஜெயந்தி
**ஷண்முகப்பிரியா**
(புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
4-30, 7-00
HAPPY HOOKER GOES HOLLYWOOD
(Strictly for Adults)

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
Kabir Bedii in
GIRL FROM INDIA
action-adults-color
new print-with
four Hindi hit songs

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
13 முதல் 15 வரை
சிவாஜி-மஞ்சுளா
**எங்க தங்கராஜா**

**ரீகல்** (யாழ். நகர்)
7th to 13 th
10-30, 2-15, 4-30, 6-30
Roger Moore as
James Bond 007
in
"MOON RAKER"
Action-packed
Bond Adventure
நுட்பமானஅதிநவீனரக
ஆயுதங்களுடன்
ஜேம்ஸ் பொன்ட்

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
ஊர்வசி சாரதாவின்
நடிப்பில்
**துலாபாரம்**
((புதிய பிரதி)
தன் குடும்பத்தில் ஏற்பட்ட சோகத்தால் குழந்தைகளுக்கு நஞ்சூட்டி தானும் நஞ்சருந்தும் பரிதாபமான முடிவு ஏன்?. .எதற்கு?

**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
ஜெய்சங்கர்-ஜெயலலிதா
**பொம்மலாட்டம்**
Coming soon
BURNING

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-30, 6-30,
கமலஹாசன்-ஸ்ரீபிரியா
**சட்டம் என் கையில்**
(கலர்-புதிய பிரதி)

**வின்சர்** (யாழ். நகர்
தினசரி 5 காட்சிகள்
13 முதல் 22 வரை
Armand Assante
Barbara Carrera
யாழ். சினிமா இரசிகப் பெருமக்கள் இதுவரையும் கண்டுகளித்திராத அற்புதத் திரைவிருந்து! நிமிடத்துக்கு நிமிடம் திகிலும் மர்மமும் நிறைந்த வியப்பான திரைவிருந்து! எதிர்பாராத தாக்கங்களும்-இன்பக் கிளர்ச்சியும் நிறைந்த ஆங்கிலப்படைப்பான
**'I The Jury'**
பார்க்கத் தவறாதீர்கள்.
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்குமட்டும்)


# "விஞ்ஞான, தொழில் நுட்பத்துறைகளில் இளைஞர்கள் முன்னேற வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"உலகில் 40,000 லயன்ஸ் கழகங்கள் இருக்கின்றன. எந்தவொரு லயன்ஸ் கழகமும் இப்படியானதொரு தொழிற் பயிற்சி நிலையத்தை நடத்தவில்லை. இந்தநிலையம் வீட்டுக்கும், நாட்டுக்கும் நல்லசேவையாற்றிவருகிறது. தற்போது நாட்டுக்குத் தேவையானது விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் தான். எமது பகுதி வளம் குறைந்ததாகும். இதனால் இளைஞர்கள் விஞ்ஞான, தொழில் நுட்பத்துறைகளில் முன்னேறவேண்டும்."

இவ்வாறு வட்டு, தொண்டேயம் தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சிபெற்றவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:-

"இந்நிலையம் மேலும் பல சேவைகளைச்செய்து, இலங்கையிலேயே பிரபல்யமான ஒரு நிலையமாக விளங்கவேண்டும்" என்று கூறினார்.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் செ. நாகநாதன் பேசுகையில்;-

"இந்நிலையம் ஆற்றிவரும் பணிகள் இளைஞர் சமுதாயத்திற்கு மிகவும் பயனுள்ளதென்றும், இதன் உயிர்நாடியாக திரு. இ. விஜயரத்தினம் விளங்கி வருகிறாரென்றும்" கூறினார்.

லயன்ஸ் கழகத்தின் சர்வதேசப் பிரிவுத் தலைவரும், மாவட்டத் தொழிற்பயிற்சித் தலைவருமான திரு. இ, விஜயரத்தினம் பேசுகையில்:- இந்நிலையம் நோர்வே லயன்ஸ் கழகம், நொருட் ஸ்தாபனத்தின் உதவியுடன் இயங்கிவருகிறது. இந்த லயன்ஸ் கழகம் இந்நிலையத்திற்குப் பெருமளவு நிதியுதவி செய்துள்ளது. தொடர்ந்தும் நிதியுதவி அளிக்கவுள்ளது. பணம்படைத்தவர்களும் இந்நிலையத்திற்கு உதவமுன்வரவேண்டும்" என்று கூறினார்.

இந்நிலையத்தின் இயக்குநர் திரு. கே. அருணசலம் நிலையம் பற்றி விரிவான அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தார்.

நிலையத்தலைவர் திரு. கே. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் இந்த நிலையத்தில் பயிற்சியை முடித்துக்கொண்ட 200 க்கும் அதிகமானவர்கள் சான்றிதழ்கள் பெற்றனர்.

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி காளிகோவிலடி சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை இரவு நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

நிலையத்தலைவர் சு.கருணாநிதி தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் செயலாளர் ஆர்.என்.யோகேந்திரலிங்கம் வருடாந்த அறிக்கையை வாசிப்பார். புதிய உத்தியோகஸ்தர் தெரிவும் இடம் பெறும்.

## சுவரொட்டி சித்திரப்போட்டி

(கோப்பாய்)

சர்வதேச இளைஞர் ஆண்டைமுன்னிட்டு தேசிய இளைஞர் சேவை மன்றம் அகில இலங்கை ரீதியில் சுவரொட்டி சித்திரப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

17-19 வயது பிரிவு ஆண் பெண்களிற்கு இடையே நடைபெறுவுள்ள சுவரொட்டிப் போட்டியில் இடம் பெறும் சித்திரம் - "சமாதானம்", "அபிவிருத்திப்பங்களிப்பு" என்பன வற்றை விளக்குவனவாக அமைக்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது

இம் மாதம் 30ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் திறமையான சுவரொட்டிகளிற்கு பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## "தொலைக்காட்சிகள் மாணவர் கல்வியை கெடுக்கின்றன"

(மாவிட்டபுரம்)

"தொலைக் காட்சி போன்ற சாதனங்கள் இன்றைய மாணவர்களின் கல்வி நிலையைக் கெடுத்துவருகின்றன. பல வீடுகளில் இரவு பூராவும் இச்சாதனங்களைப் பெற்றோர் பயன்படுத்துவதால் மாணவர்கள் படிக்கும் நேரங்களிலெல்லாம் தொலைக்காட்சிக்கு முன்பாக உட்கார்ந்து படிப்பைக் கெடுத்துக்கொள்கிறார்கள். மாணவர்களது கல்வியைப் பெற்றோர் சீரழித்துவிடக் கூடாது".

இவ்வாறு குரும்பசிட்டி பொன். பரமானந்தர் மகா வித்தியாலய நிறுவியர் நினைவு விழா, பரிசளிப்பு விழா ஆகியவற்றில் சிறப்பு விருந்தினராக் கலந்துகொண்டு உரையாற்றிய காங்கேசன்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. சி. கனகசுந்தரம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

யாழ். பிரதேச பிரதம கல்வி அதிகாரி திரு. இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறியதாவது:-

"மாணவர்கள் கல்வியுடன் ஒழுக்கத்திற்கும் முக்கிய இடம் கொடுக்கவேண்டும். அவர்கள் சமயப்பற்று மிக்கவர்களாகவும் திகழவேண்டும். இதனால் அவர்களது சிந்தனைகள் தவறான வழிகளில் இட்டுச் செல்லப்படாமல் நேரியவழியில் செல்ல முடியும் பாடசாலைகளிலும் சரி. வெளியிலும் சரி பெரியோர்களை மதிக்கும் பண்பை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். என்றார்.

நிறுவியவர் நினைவுப்பேருரையை சட்டத்தரணி. மனோ ஸ்ரீதரன் ஆற்றினார்.

திருமதி. தேவராணி சுந்தரலிங்கம் பரிசில்கள் வழங்கினார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்க சார்பில் திரு. சி. நடராசா (ஆசிரியர்)நன்றி கூறினார்.

கலை நிகழ்ச்சிகளும் நடந்தன.

## பளை ம. வித்தியாலயம்

(பச்சிலைப்பள்ளி)

பரந்தன் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் பளை மகாவித்தியாலயம் மூன்று பிரிவுகளிலும் இயக்கச்சி அரசினர் பாடசாலை இரண்டு பிரிவுகளிலும் முதலாமிடத்தையும் பெற்றது.

பளை மகா வித்தியாலயம் 15, 17, 19, வயதுகளுக்குட்பட்ட பிரிவுப் போட்டிகளிலும், இயக்கச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 11 13 வயதுகளுக்கு உட்பட்ட பிரிவுப் போட்டிகளிலும் முதலாமிடங்களைப் பெற்றது.

# 'மக்கள் பிரச்னையை அணுகியுள்ள எழுத்தாளர்'

## நூல் அறிமுக விழாவில் பேச்சு

[மானிப்பாய்]

"'ஈழத்து இலக்கிய வரலாற்றை நச்சுப்படுத்திய ஆபாச இலக்கியங்களுக்கு எதிராக ஒரு சகாப்தத்துக்கு மேலாகப் போராடிய ஒரே இயக்கம் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும், முற்போக்கு எழுத்தாளர்களுமே. ஈழத்தின் ஆரோக்கியமான இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டவர்களும் முற்போக்குக்கலை இலக்கியவாதிகளே. எடுத்த எடுப்பிலேயே கவிஞர் செல்வக்குமார் மக்கள் பற்றிய பிரச்னைகளை முற்போக்குபாதையில் அணுகியமை போற்றத்தக்கது."

இவ்வாறு இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலத்தில் திரு தவக்குமார் தலைமையில் இடம் பெற்ற 'கோடுகளும் கோலங்களும்' கவிதை நூல் அறிமுக விழாவில் நாவலாசிரியர் எஸ். அகஸ்தியர் கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் இலக்கியம் வார்த்தைச் சரடுகளால் சிருஷ்டி அந்தஸ்தைப் பெறமாட்டாது. அது கடந்த காலத்தின் எச்சரிக்கையாகவும் நிகழ் காலத்தின் விமர்சனமாகவும் எதிர் காலத்தில் வழிகாட்டியாகவும் திகழவேண்டும். இதுவே சிறந்த இலக்கியங்களுக்கு இலக்கணமாகும் மக்களை மறந்து இயற்கைக் காட்சிகளை வர்ணிக்கும்இலக்கியங்கள் விநோதமாக இருக்கலாம் ஆனாலும் அவை மக்களுக்கு வழிகாட்டும்இலக்கியங்கள் ஆகாகவிஞர் செல்வக்குமார் மக்கள் பிரச்சினைகளைத் தொட்டுக் காட்டி கவிதைகள் புனைந்திருப்பதன் மூலம் அவர் எதிர் காலத்தில் நல்ல கவிஞனாகத் திகழ வாய்ப்பு இருக்கிறது. மற்றும் பலர் பேசினர்.

## பூநகரியில் கொள்ளை

(கிளிநொச்சி)

பூநகரியிலுள்ள கிராஞ்சி கிராமத்தில் ஒருவீட்டில்12,000 ரூபா பணமும் 3,000 ரூபா காசோலையும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்ற இச்சம்பவம்பற்றி கூறப்படுவதாவது. சம்பவதினம் வீட்டில் நுழைந்த இளைஞர் கோஷ்டியினர் வீட்டுச் சொந்தக்காரர் தம்பிப்பிள்ளை ஈழவர்மன் என்பவரை தாக்கி மேற்படி பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

காயமடைந்தவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (சூ)

## புத்தகப் பரிசில்கள்

[யாழ்ப்பாணம்]

கீழ்க்கரவை ஞானவைரவர் ஆலயத்தில் நடைபெற்ற ஆனி உத்தர உற்சவ தினத்தன்று பஜனை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பாடசாலை பிள்ளைகளுக்கு புத்தகப் பரிசில்கள் வழங்கப்பட்டன. இப்பஜனை நிகழ்ச்சி கீழ்க்கரவை இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு கி. சி சிவநேசன் தலைமையில் வராந்தம் நடைபெற்று வருகிறது. இவ்வைபவத்தில்திரு. கு. கதிரவேல் அடியார் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார். புத்தகப்பரிசில்களில் பெரும் பகுதியை தொழிலதிர் திரு. க. கனகராசா வழங்கியிருந்தார்.

## கடன் சபை துரிதநடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கல்வி திணைக்கள கடன்வழங்கு சபை100க்கு மேற்பட்ட அதன் உறுப்பினர்களுக்கு கடனை வழங்கி வருகிறது.

கடனை துரித கெதியில் வழங்குவதற்கு இச் சபையின் தலைவரும், முல்லைத்தீவு பிரதேச கல்விப் பணிப்பாளருமான ஜனாப் எம்.எம்.மன்சூர் பெரும் முயற்சி எடுத்தார்.


# பதவி வெற்றிடம்

**பொதுமுகாமையாளர்**

சம்பள அலகு இல-101.7

600-1000
40X10

மேற்படி சம்பள அலகு அளவில் பொதுமுகாமையாளர் பதவிக்கான வெற்றிடத்துக்கு கீழ்க்காணும் தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம்செய்பவர் தமது விண்ணப்பத்தினை 25-07-84ந் திகதிக்கு முன்னர் "தலைவர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்" என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல்வேண்டும்.

**தகைமைகள்**

(அ) கூட்டுறவு வேலையாளர் சம்பள அலகு 8ல் முகாமைத்துவ / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது மேற்படி மட்ட பதவியில் 9வது சம்பள அலகில் 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டதாரி அல்லது அதற்குச் சமமான தராதரத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / தொழில்நிறுவனமொன்றில்முகாமை மட்டத்திலான பதவியில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

(இ) கூட்டுறவு பணியாளர் [உயர்தர தராதரப்பத்திரம்) க. பொ. த. [உயர்தர தராதரப்பத்திரம்] 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்தக/தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**தலைவர்,**
கரைச்சி வடக்கு, ப. நோ. கூ. சங்கம்,
பரந்தன்.

திகதி: 6-7-84. [845]

# மாதர்கள் பிரச்னைகள் தீர்வுக்கு சிறந்த வழி

(சாவகச்சேரி)

''நகரசபை எல்லேக்குள் வழமையாகக் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் உருவாக்கப்படுவதில்லே. இருப்பினும்கூட, சாவகச்சேரி நகரசபை எல்லேக்குள் இருக்கின்ற நுணுவில் பகுதியில் இப்பகுதி விசேட சேவை அலுவலரின் பெரு முயற்சி காரணமாக இங்கு ஒரு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் பட்டுள் ளது. இச்சங்கம்மூலம் இப்பகுதியில் வாழ்கின்ற மாதர்களின் சமூக, பொருளாதார வேலேவாய்ப்புப் பிரச்னேகளுக்குத் தீர்வு காணமுடியும்.''

இவ்வாறு சாவகச்சேரி கிராம அபிவிருத்தி உப அலுவலர் திரு. ஆர். பரராஜசேகரம் நுணுவில் மேற்குப் பகுதியில் புதிய மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினே அங்குரார்ப்பணம் செய்துவைத்து உரையாற்றும்போது தெரிவித்தார்.

திரு. ஆர். பரராஜசேகரம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் இப்பகுதி விசேட சேவை அலுவலர் திரு. வீ. எஸ். துரைராஜா பேசுகையில்—

''கிராமங்களிலே வாழ்கின்ற பெண்கள் தனித்தனியாகச் சிந்திப்பதை விடுத்து, ஒரு ஸ்தாபனரீதியாகச் சிந்திக்க முற்படுகின்றபோது, பல ஆக்கபூர்வமான செயல் திட்டங்கள் வெளிவருவது கண்கூடு இன்று பல சர்வதேச நிறுவனங்கள் மகளிரின் அந்தஸ்தை உயர்த்து வதற்காக,பல செயல் திட்டங்களே உருவாக்கிச் செயல் படுத்தி வருகின்றன''

''ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் இன்று சமுதாயத்திலே வளர்ச்சிப்பாதையில் சென்று கொண்டிருக்கிறுர்கள். பெண்களின் வளர்ச்சிக்கு, அடிப்படை காரணமாக அமைந்திருப்பது பெண் அமைப்புகளே யாகும்.'' எனவும் தெரிவித்தார்.

இப் புதிய சங்கத்தின் தலைவியாக, திருமதி வ. தண்டாயுதபாணியும், செயலாளராக திருமதி எஸ். குலசேகரமும், பொருளாளராக, செல்வி.லோ அப்புத்துரையும் மற்றும் எட்டுப் பேர் கொண்ட நிர்வாக கமிட்டியும் தெரிவு செய்யப் பட்டது.

## வானெலியில் இன்று

[மானிப்பாய்]

கொக்குவில் கிருபாகர சுப்பிரமணிய கோவில் வரலாறு இன்றிரவு கோபுரதரிசனம் நிகழ்ச்சியில் இடம் பெறும். (ப)

## வடபகுதி இளைஞருக்கு இப்படியும் அனுபவம்

(றியாட்)

கொழும்பில் இருந்து சவூதிக்கு விமானம் ஏறிய வடபகுதி இளைஞர்கள் சில மணி நேரம் விமானத்தில் பறந்துவிட்டு மீண்டும் கொழும்பை சென்றடைந்தனர்.

இச் சம்பவம் அண்மையில் கட்டு நாயக்கா விமான நிலேயத்தில் நடந்தது.

வேலே வாய்ப்புடன் சவூதிக்கு அனுப்பப்பட்ட வடபகுதி இளைஞர்கள் 53பேருக்கே இந்த அனுபவம் ஏற்பட்டது.

பிரஸ்தாப இளைஞர்களே ஏற்றிக் கொண்டு கட்டு நாயக்கா விமான நிலேயத்தில் இருந்து புறப்பட்ட விமானம் வானத்தில் சில மணி நேரம் பறந்து பின்னர் இயந்திரக் கோளாறு காரணமாக புறப்பட்ட இடத்தையே வந்தடைந்ததாம். விமானத்தில் இருந்து இறக்கிவிடப் பட்ட இளைஞர்கள் பலத்த சோதனைக்குப்பின்னர் வேறு ஒரு விமானத்தில் ஏற்றப்பட்டுச் சவூதிக்கு அனுப்பப்பட்டனர்.

## பத்திரிகை ஆசிரியருக்கு பிரிவுபசாரம்

(கொழும்பு)

'வீரகேசரி' முன்னுள் ஆசிரியர் திரு ஈ. வி. டேவிட் ராஜுக்கு கொழும்பு தமிழ்ச் சங்கம் அளிக்கும் பிரிவுபசார விழா இம்மாதம் 15ம் திகதி மாலே சங்க மண்டபத்தில் நடைபெறுகிறது.

முன்னுள் உயர் நீதிமன்ற நீதியரசரும் சட்டப் பேராசிரியருமான திரு எச். டவிள்யூ. தம்பையா தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் திருவாளர்கள் எஸ். எம். கார்மேகம், செல்லப்பா நடராசா, ஆர்.சிவகுருநாதன், திருமதி யோகா பாலச்சந்திரன், ஜனுப் என்.எம்.அமீன் ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

## இப்படியும் நடக்கிறது

வெள்ளத்திஞல் ஓரளவு குண்டும், குழியுமாகிவிட்ட பொது வீதியைத்திருத்துவதற்கு எத்தனை நாட்கள் தேவை?

''அது, வீதியின் தூரத்தைப் பொறுத்தது...'' என்று நீங்கள் பதிலளிப்பது எனது காதுகளில் ஒலிக்கிறது. ஆனல் நான் கூறும் சங்கதி வேறு.

நமது பெருந்தெருக்கள் திணைக்களத்தின் அரும்பெரும் சாதனே இது: சுமார் நூறு யார் தூர வீதியைத் திருத்த பத்துநாட்கள் பிடித்திருக்கிறது! இடம்: யாழ். பிறவுண் வீதியில் ஒரு பகுதி. என்ன பரிசுக்கு சிபார்சுசெய்யலாம்?

- ஊடுருவி

## அந்தியேட்டிக்கு கீரிமலேயில் நீராடியவர் மரணமானர்

(மாவிட்டபுரம்)

தாயாரின் அந்தியேட்டிக் கிரியைக்காக கீரிமலேக்கு வந்தவர் மதுபோதையுடன் கடலில் நீராடிய சமயம் நீரில் மூழ்கி மரணமாஞர்.

புன்னுலேக்கட்டுவனைச்சேர்ந்த அப்புத்துரை விக்னேஸ்வரன் என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி நா. தம்பிராஜா விசாரணை நடத்திஞர்.

தமது தாயாரின் அந்தியேட்டிக் கிரியைகளே நிறைவேற்றுவதற்காக கீரிமலேக்கு வந்த காலமானவர் மதுபோதையுடன் கடலில் நீராடச் சென்றதாகவும். நீராடிக் கொண்டிருக்கும்போது தமது மைத்துனர் நீரினுள் அவதிப்படவே அரைக் காப்பாற்றி கரை சேர்த்தாரெனவும், பின்னர் தாம் நீராடிக் கொண்டிருந்தபோது நீரில் மூழ்கினுரெனவும் விசாரணையில் தெரிய வந்தது.

விபத்து மரணமென தீர்ப்பு வழங்கிய மரணவிசாரணை அதிகாரி; புனித இடமான கீரிமலே கேளிக்கைக்குரிய இடமாக மாறுவது குறித்து கவலே தெரிவித்தார்.

''கீரிமலே ஓர் புனித இடமாக மதிக்கப்பட்டு அங்கு சைவாசார முறைப்படி பல்வேறு சடங்குகள் இடம் பெறுகின்றன. ஆனல் இவற்றை நிறைவேற்றக் கூடியவர்கள் ஆசாரசீலர்களாக இருக்க வேண்டியது அவசியம். தாயாரின் அந்தியேட்டிக் கிரியையை நிறைவேற்ற வந்த மகன் மதுபோதையில் கடலில் மூழ்கி மரணமாகியுள்ளார். இது போல் முன்னரும் பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன ஆகவே கீரிமலேயின் புனிதத்தை நாம் பாதுகாக்க முன்வரவேண்டும். அதனே கேளிக்கைக்குரியதோர் இடமாக மாற்ற முனையக்கூடாது'' என்று மரணவிசாரணை அதிகாரி மேலும் குறிப்பிட்டார்

## சாம்பியனுகத் தெரிவு



(யாழ்ப்பாணம்)

**அண்மையில் நடை**பெற்ற வேம்படி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில், 17-வயதுக்குட்பட்டவர்கள் பிரிவில் உயரம் பாய்தலிலும் நீளம் பாய்தலிலும் முதலிடத்தைப் பெற்று சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்ட செல்வி லலிதா சத்தியநாதன், தமது வெற்றிக் கேடயங்களுடன் படத்தில் காணப்படுகின்றுர்.

(படம்: 'மதவா')

## இன்று

[யாழ்ப்பாணம்]

நவாலி அட்டகிரிக் கந்தசாமி கோவில் மகாகும்பாபிஷேகம் இன்று நடைபெறுகிறது. காலே யாகபூசை இடம் பெற்று 10 மணிக்கு கும்பாபிஷேகம் நடைபெறும்.

## இனப்பிரச்னைக்கு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளாவ சபையில் கரகோஷம் எழுந்தது குறிப்பிடத்தக்கது.

### அநாதைக் குழந்தை

திரு சரத் முத்தெட்டுவேகம தமது உரையில், வட்டமேசை மகாநாடு குறித்து அபிப்பிராயம் தெரிவிக்கையில், வட்டமேசை மகாநாடு தாய் தந்தையற்ற ஒரு அநாதைக் குழந்தை போல் இருப்பதாக வர்ணித்தார். சிறீலங்கா சுதந்திரக் கட்சி இம் மகாநாட்டில் இல்லாததும் ஒரு காரணம் என்று சொன்னுர்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் சிங்கள பிரிவினைவாதத்தை விரும்பாத அதே நேரத்தில் சிங்களபேரினவாதத்தையும் ஏற்றுக் கொள்ளமாட்டாதென்றும் திரு சரத் உறுதி அளித்தார்.

உற்சாகமான முறையிலும், உறுதியான முறையிலும் இங்கு இந்த ஆண்டு விழாவைக் கொண்டாட முடியவில்லே என்று கவலேதெரிவித்த கலவான எம்.பி, வடபகுதியில் தொடர்ச்சியான பல்வேறு வகைப்பட்ட இன்னல்களே தமிழ் மக்கள் அனுபவித்துக்கொண்டிருப்பதுதான் காரணம் என்றுர்.

வடபகுதியில் ஒருவகையில் மக்கள் துன்பமுறுகிறுர்கள்; தென்னிலங்கையில் வேறு விதங்களில் ஏற்படும் பிரச்னைகளால் கஷ்டப்படுகிறுர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்,

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் தேசியமயமாக்கப்பட்ட தனியார் உடைமைகள் மீண்டும் வேறுவிதங்களில் உருவெடுத்து வருவதை காணக்கூடியதாகவும் உணரக்கூடியதாகவும் இருக்கிறது என்றும் ஏழைபாட்டாளி மக்கள் அனுபவித்து வந்த மானியங்கள் நிறுத்தப்பட்டு வருகிறது என்றும் திரு. சரத் சொன்னுர்.

'இந்த அரசாங்கத்திஞல் ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுவரும் அதே நேரம் சர்வாதிகார்ரம் தலையெடுத்து வருகிறது. இதை முறியடிக்க தேசிய ரீதியாகப் பாட்டாளிவர்க்கம் ஐக்கிய போராட்டம் ஒன்றை நடத்த முன்வர வேண்டும்' என்று திரு. முத்தெட்டுவேகம வேண்டுகோள் விடுத்தார்.

தென்னிலங்கையில் உள்ள இடதுசாரிகளில் பெரும்பாலானேர் சுயாட்சிக் கோரிக்கையை ஏற்றிக்கொண்டுள்ள அதே காலகட்டத்தில் அதற்காகப் போராட்டம் ஒன்றையும் நடத்த தயாராக உள்ளனர். தமிழ் மக்களாகிய நீங்களும் முன்வர வேண்டும்' என்றும் கேட்டுக் கொண்டார். (மா)

## தாயகம் புறப்பட்ட இளைஞரை தாம்போதி பலி எடுத்தது!

(மன்னர்)

இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து தாயகம் செல்லவென பெற்றேர்களுடன் ரயில் மார்க்கமாக தலேமன்ஞர் துறைமுகத்திற்குச் சென்று கொண்டிருந்த 19வயது இளைஞர் ஒருவர் தாம்போதி பாலத்துடன் மோதி மரணமாஞர்.

மஸ்கெலியாவைச் சேர்ந்த எஸ்.விஜயலிங்கம் என்பவரே இவ்வாறுமரணமானவராவார்.

மரணமானவர் தாயகம் செல்லவென ரயில் மார்க்கமாக வந்து கொண்டிருக்கும் போது செட்டிக்குளத்திற்கும், மடுவீதிக்குமிடையில் ரயிலில் நின்று தலேயை வெளியே நீட்டிய போதே தாம்போதிபாலம் ஒன்றுடன் மோதி மரணமாஞர்.

இம் மரணம் தொடர்பாக மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி ஜனுப் எம். ஈ. ஏ.ஜப்பார் தற்செயல் விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார்.

மரணமானவரின் சடலத்தை தலேமன்ஞர்துறை நலன்புரி அதிகாரிகளான திரு. எம். சர்க்கரியாஸ், திரு, எஸ். ரங்கநாதன், திரு. சேவியர் பெர்ஞண்டோ ஆகியோர் தலே மன்ஞர்துறை இலங்கை வங்கிக்கிளே ஊழியர்கள், ரயில் நிலேய ஊழியர்கள், சுங்க திணைக்கள ஊழியர்கள் ஆகியோரின் உதவியுடன் நல்லடக்கம் செய்தனர்.


## மரண அறிவித்தல்

### சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்கள்

நல்லூர் கந்தசுவாமிகோவில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்கள் சிவபதமடைந்துவிட்டார். ஈமக்கிரியைகள் 13-7-84 வெள்ளி காலே 9மணிக்கு 110/11 சட்டநாதர் கோவில் மேற்கு வீதியில் நடைபெற்று தகனக்கிரிகைகட்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அனைவரும் இவ்வறிவித்தலே ஏற்றுக்கொள்ளவும்.

858



## மரண அறிவித்தல்

### திருநெல்வேலி கிழக்கு பொன்னையா தம்பிப்பிள்ளே (செல்லத்துரை)

(இளைப்பாறிய கலால் உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு செங்குந்தா வீதி, பொன்னையா தம்பிப்பிள்ளே (செல்லத்துரை) காலமாஞர்.

இவர் கரம்பனைச் சேர்ந்த செங்குந்தா இந்துக் கல்லூரி ஆசிரியை பிலோமினுவின் அன்புக் கணவரும் புளோரியன் (ஜெர்மனி) கிறிஸ்றெல்லா (மொறட்டுவ பல்கலேக் கழகம்), டொமினிக் (யாழ். இந்துக் கல்லூரி) சிசில் ஆகியோரின் அருமைத் தந்தையுமாவார். அன்னுரின் ஈமக்கிரிகைகள் சனிக்கிழமை (14-7-84) மாலே 4மணியளவில் அன்னுரின் இல்லத்தில் நடைபெற்று செம்மணி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

865


இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூலே மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.